NITHRA®

# தோஷ பரிகாரங்கள் மற்றும் பரிகார கோவில்கள்...

## PDF வடிவில்..!!

தொகுத்து வழங்கியவர்
நித்ராவின் ஆஸ்தான ஜோதிடர்
அ.மோகன்ராஜ்

www.nithrabooks.com | books@nithra.mobi | Cell: 98659 24040

Copyright is reserved to the publisher, therefore the person who will try to imitate or try to print this book illegally or without the prior written permission of this publisher in any form, will be responsible for the loss and may be punished  for compensation under copyright act.

இந்தப் புத்தகத்தைப் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி
மறுபதிப்பு செய்வதோ, அச்சேற்றுவதோ, நகல் எடுப்பதோ
கூடாது. மீறினால் காப்பிரைட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நூலின் பெயர் : **தோஷ பரிகாரங்கள் மற்றும் பரிகார கோவில்கள்...**

பக்கங்கள் : 61

விலை : ரூ. 50

பதிப்பு : 2020

உரிமை : பதிப்பகத்தாருக்கே

In the compilation of this book all possible precautions have been taken to ensure that the informations provided is correct. Yet the publisher / authors will nto be held responsible for any printing errors or damage resulting from any inadvertent omission or inaccuracies in this book. However suggestions for the improvement of this book (Including printing errors, ommissions, etc. if any) are welcome and these will be incorporated in the subsequent editions of this book.

---

Published by : **P. Gokulanathan, Nithra Publications,** AV Plaza 3rd & 4th Floor, South Car Street, Tiruchengode - 637211.

# தோஷ பரிகாரங்கள்

ஜாதகம் என்பது எந்த லக்னத்தில் பிறந்தால் நல்லது? எந்த லக்னத்தில் பிறந்தால் கெட்டது? என்று குறிப்பிட்டு சொல்வதற்கு இல்லை. எல்லா லக்னங்களும் சிறந்தவையே. ஜாதகத்தில் கிரகம் நிற்கின்ற நிலையும், கிரகங்களின் அமைவும் மட்டுமே ஜாதகரை யோகமுள்ளவராகவும், யோகமற்றவராகவும் மாற்றுகிறது. அதன்படிதான் தோஷமும் அமைகிறது.

ஒருவருடைய ஜாதகத்தில் யோகங்கள் நிறைய இருக்கலாம். ஆனால், அந்த யோகத்தை கொடுக்கக்கூடிய தசாபுத்திகள் வந்தால் மட்டுமே யோகங்கள் நற்பலனை கொடுக்கும். சில ஜாதகங்களில் எண்ணற்ற ராஜ யோகங்கள் இருக்கும். ஆனால், அந்த யோகங்களை கொடுக்கின்ற கிரகங்கள் கெட்டு, தோஷங்களாக உருவெடுக்கிறது.

ஒருவர் முற்பிறப்பில் செய்த தவறுகளின் படியும், அவர்கள் முன்னோர்களின் பாவ, புண்ணியங்களின் அடிப்படையிலும் பிறக்கும்போதே நம் விதியை பிரம்ம தேவன் விதித்து விடுகிறார். இப்பிறப்பில் நம் ஜாதகத்தில் அந்த பாவ புண்ணியங்கள் தோஷமாக அமைகின்றது.

இந்த காலக்கட்டத்தில் பலரும் தோஷங்களுக்கு ஆளாகி என்ன செய்வது? என்று அறியாது பல கோவில்களை நோக்கி பயணிக்கின்றனர். நமக்கு வரும் தோஷங்கள் எதனால் வருகின்றது? என்ன செய்ய வேண்டும்? எந்த கோவில்களுக்கு சென்று என்ன பரிகாரம் செய்வது என்று தெரியாமல் இருக்கிறீர்களா? இது உங்களுக்கான பதிவு!!...

**ஜாதகத்தில் உள்ள தோஷங்களின் வகைகள் :**

1. செவ்வாய் தோஷம்

2. பித்ரு தோஷம்

3. புத்திர தோஷம்

4. மாங்கல்ய தோஷம்

5. சர்ப்ப தோஷம்

6. களத்திர தோஷம்

7. பிரம்மஹத்தி தோஷம்

8. நாக தோஷம்

9. ராகு-கேது தோஷம்

10. நவகிரக தோஷம்

11. சகட தோஷம்

இது மட்டுமல்லாமல் நமக்கு தெரியாத நவகிரக தோஷங்கள் மற்றும் பல்வேறு வகையான தோஷங்கள் இருக்கின்றன. இந்த தோஷங்கள் நம் ஜாதகத்தில் இருப்பதால் திருமணம் செய்யும்போதும், மங்களகரமான விஷயங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான விஷயங்கள் தொடங்கும்போதும் பல்வேறு இடையூறுகளை கொடுக்கின்றது.

## செவ்வாய் தோஷம்

செவ்வாய் தோஷமானது திருமண தடையை ஏற்படுத்தக்கூடிய தோஷங்களில் ஒன்றாகும். ஜாதகத்தில் லக்னத்திலிருந்து 2,4,7,8,12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் அது செவ்வாய் தோஷமாக கருதப்படுகிறது. இதில் சில வீடுகளில் செவ்வாய் இருந்தாலும் செவ்வாய் ஆட்சி, உச்சம், நீசம் பெற்றிருந்தால் தோஷம் குன்றி இருக்கும். செவ்வாய் தோஷம் ஏற்பட்டாலும் சில விதி விலக்குகளின் அடிப்படையில் செவ்வாய் தோஷம் குறைவுப்படும். அவ்விதி விலக்குகள் பின்வருமாறு :

### செவ்வாய் தோஷத்திற்காக விதிவிலக்குகள் :

மேஷம், விருச்சிகம், மகரம் ஆகிய வீடுகளில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.

குரு, சூரியன், சனி சந்திரனுடன் சேர்ந்திருந்தால் தோஷமில்லை.

சூரியன், சந்திரன், குரு, சனி ஆகியவற்றால் பார்க்கப்பட்டால் பாவமில்லை.

கடகத்தில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லை.

2ஆம் இடம் மிதுனம் அல்லது கன்னியாக இருந்தாலும் தோஷமில்லை.

8ஆம் இடம் தனுசு, மீனம் இருந்தால் தோஷமில்லை.

### செவ்வாய் தோஷம் வர காரணம் என்ன?

செவ்வாய் என்பவர் சகோதர/சகோதரி மற்றும் மனைகளை குறிக்கக்கூடிய கிரகம் ஆகும். நாம் செய்யும் வினைகள் இவர்களை பாதிக்கும் வகையில் இருக்கும் பட்சத்தில் நாம் எடுக்கும் அடுத்த பிறவிகளில் அவை செவ்வாய் தோஷங்களாக மாறுகின்றன.

அதாவது, நம்முடன் பிறக்கும் சகோதர/சகோதரிகளை ஆபத்தான சமயத்தில் அவர்களுக்கு உதவி செய்யாமல் நிற்கதியாய் விடுவதோ அல்லது அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சொத்து தொடர்பான பாகங்களை கொடுக்காமல் அவர்களை ஏமாற்றுவதும் மற்றும் மனை தொடர்பான செயல்பாடுகளில் மனையை களங்கப்படுத்தும் விதமான செயல்களில் ஈடுபடுவதால் ஏற்படும் தோஷமாகும்.

### செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் பிரச்சனைகள் :

திருமண தடை, திருப்தியில்லா மணவாழ்க்கை, குழந்தையின்மை, சகோதர உறவுகளுடன் ஒற்றுமை குறைவு, பூர்வீக சொத்துக்களான நிலம், வீடு சம்பந்தப்பட்ட வழக்குகளில் இழுபறி, விபத்து கண்டங்கள் போன்ற பிரச்சனைகள் செவ்வாய் தோஷத்தால் ஏற்படுகிறது.

### செவ்வாய் தோஷம் உள்ளவர்களின் திருமணம் :

செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் ஆணோ, பெண்ணோ இருவரும் செவ்வாய் தோஷம் உள்ளவர்களை மட்டுமே திருமண செய்ய வேண்டும். இவர்கள் செவ்வாய் தோஷம் இல்லாத ஜாதகர்களை திருமணம் செய்து கொண்டால் ஆரோக்கியம் தொடர்பான பிரச்சனைகள் ஏற்பட்டு கொண்டு இருக்கும். தம்பதியர்களுக்குள் சிறு சிறு விஷயங்களுக்கும் வாக்குவாதம் தோன்றி மறையும்.

தோஷம் இல்லாவர்களுக்கு தோஷம் உள்ளவரை திருமணம் செய்து வைத்தால் சிறு சிறு விஷயங்களுக்கும் விட்டுக்கொடுக்காமல் மனக்கசப்புகளை ஏற்படுத்தி கொண்டே இருப்பார். இந்த மனக்கசப்புகள் சில நேரங்களில் தம்பதிகளை விவகாரத்துக்கு அழைத்துச் செல்லும்.

### செவ்வாய் தோஷ பரிகாரங்கள் :

செவ்வாய்க்கிழமைகளில் முருகன் மற்றும் முருகனின் அம்சம் கொண்ட அங்காரகனையும் வழிபட்டு வந்தால் செவ்வாயின் தாக்கம் குறையும்.

விநாயகருக்கு செவ்வாய்க்கிழமை அன்று வரும் சதுர்த்தி நாளில் அபிஷேக ஆராதனை செய்து விரதம் இருந்தால் நல்லது நடைபெறும். இவ்வாறு 41 செவ்வாய்க்கிழமைகள் விரதம் இருக்க வேண்டும்.

செவ்வாய்க்கிழமையில் வரும் மிருகசீரிடம் நட்சத்திரத்தில் துவரை தானம் செய்தால் செவ்வாயின் தாக்கம் குறையும்.

செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் செவ்வாய் காயத்ரீ மந்திரம், தியான மந்திரம், சூரிய கவசம் போன்றவற்றை சொல்லி கடவுளை மனமுருகி வழிபட்டு வந்தால் தோஷம் விலகும்.

செவ்வாய் தோஷக்காரர்கள் இரத்தக்கல் பதித்த தங்க மோதிரத்தை மோதிர விரலில் வலது கரத்தில் அணியலாம்.

முருகனுக்கு சிவப்பு மலர்கள் கொண்டு அர்ச்சனை செய்து வழிபட்டால் தோஷம் விரைவில் நீங்கிவிடும்.

நவகிரகத்தில் உள்ள செவ்வாய் கிரகத்திற்கு 27 செவ்வாய்க்கிழமைகள் நெய்விளக்கு ஏற்றி வந்தால் செவ்வாய் தோஷம் விலகும்.

நவகிரக செவ்வாய்க்கு பிறந்த தேதி அல்லது கிழமைகளில் அர்ச்சனை செய்வதால் நன்மை உண்டாகும். இதுபோன்ற பரிகாரங்களை செய்வதன் மூலம் செவ்வாய் தோஷம் விலகி வாழ்க்கை செழிப்பாகும்.

**செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் செல்ல வேண்டிய கோவில்கள் :**

செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்கு சீர்காழி வைத்தீஸ்வரன் கோவில் சிறப்பு வாய்ந்த பரிகார ஸ்தலமாக அமைகின்றது.

மேலும்

சுப்ரமணியசுவாமி திருக்கோவில், சென்னிமலை, ஈரோடு.

சங்கமேஸ்வரர் திருக்கோவில், பவானி, ஈரோடு.

கந்தசுவாமி திருக்கோவில், திருப்போரூர், காஞ்சிபுரம்.

மலையாள தேவி துர்காபகவதி அம்மன் திருக்கோவில், நவகரை, கோயம்புத்தூர்.

அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில், மேலக்கடம்பூர், கடலூர்.

அருணஜடேசுவரர் திருக்கோவில், திருப்பனந்தாள், தஞ்சாவூர்.

கைலாசநாதர் திருக்கோவில், கோடகநல்லூர், திருநெல்வேலி.

வீரபத்திரர் திருக்கோவில், அனுமந்தபுரம், காஞ்சிபுரம்.

கல்யாண கந்தசுவாமி திருக்கோவில், மடிப்பாக்கம், சென்னை.

அகஸ்தீஸ்வரர் திருக்கோவில், வில்லிவாக்கம், சென்னை.

தேனுபுரீஸ்வரர் திருக்கோவில், திருப்பட்டீசுவரம், தஞ்சாவூர்.

அகோர வீரபத்திரர் திருக்கோவில், வீராவாடி, திருவாரூர்.

பிரளயநாதசுவாமி திருக்கோவில், சோழவந்தான், மதுரை.

விருத்தபுரீஸ்வரர் திருக்கோவில், திருப்புனவாசல், புதுக்கோட்டை.

சுப்பிரமணியர் காங்கேயன் திருக்கோவில், காங்கேயநல்லூர், வேலூர்.

போன்ற கோவில்களுக்கு சென்று வழிபட்டும் வளம் பெறலாம்.

## பித்ரு தோஷம்

தோஷங்களில் மிக கொடுமையான தோஷம் பித்ரு தோஷம் ஆகும். பித்ரு ஸ்தானம் என்பது ஐந்து மற்றும் ஒன்பதாம் பாவகம் ஆகும். நம் முன்னோர்களை பற்றி அறிய உதவும் பாவகம் ஒன்பதாம் பாவகம் ஆகும். ஒன்பதாம் பாவ அதிபதி பலம் குறைந்தாலும் அல்லது ராகு-கேதுக்கள் ஒன்பதாம் பாவத்தில் சம்பந்தப்பட்டால் அல்லது இயற்கை பாவிகள் ஒன்பதாம் பாவகத்தை பார்த்தாலோ பித்ரு தோஷம் ஏற்படுகின்றது.

### பித்ரு தோஷம் ஏற்பட காரணம் என்ன?

நமது தாய் வழி மற்றும் தந்தை வழியில் வாழ்ந்து மறைந்துபோன முன்னோர்கள் நமது பித்ருக்கள் ஆவார்கள்.

வீட்டில் இறந்தவர்களின் சடலங்களை வைத்துக்கொண்டு சண்டையிடுதல், பித்ருக்களுக்கு சிரார்த்தம் காரியங்கள் சரிவர செய்யாமல் பித்ருக்களின் ஆத்மா சாந்தி அடையாமல் இருப்பதினால் ஏற்படும் தோஷமே பித்ரு தோஷம் ஆகும்.

ஒருவர் முற்பிறவியில் தாய், தந்தையை கவனிக்காமல் இருந்தால் அதற்காக பெற்றோர்கள் சாபமிடுவதால் மறுபிறவியில் அவர்கள் பித்ரு தோஷ ஜாதகத்துடன் பிறக்கிறார்கள்.

### பித்ரு தோஷம் என்ன செய்யும்?

பித்ரு தோஷ ஜாதக அமைப்பு கொண்ட ஜாதகருக்கு திருமணம் மிக தாமதமாக நடக்கும் அல்லது திருமணம் நடக்காமலும் இருக்கும். அப்படி திருமணம் நடந்தாலும் விவாகரத்து ஏற்படவும் அதிக வாய்ப்புகள் உள்ளது.

கணவன், மனைவியிடையே அன்யோன்யம் இருக்காது. வெறுப்பு அதிகரிக்கும். குடும்ப வாழ்க்கை நிம்மதியற்று போகும்.

ஒரு சிலருக்கு பலமுறை திருமணமும், கலப்பு திருமணமும் நடைபெறும். ஒரு சிலர் பெற்றோர்களுக்கு தெரியாமல் ரகசிய காதல் திருமணம் செய்து கொள்வர்.

பித்ருக்கள் நமக்கு கொடுக்கும் சாபம், கடவுளிடம் நமக்கு கிடைக்கும் வரங்கள் அனைத்தையும் பித்ரு தேவதைகள் நம்மை அனுபவிக்க விடாது.

### பித்ரு தோஷ பரிகாரங்கள் :

பித்ரு தோஷம் உள்ளவர்கள் பரிகாரம் செய்யாமல் இருந்தால் அவர்கள் தொடர்ந்து கஷ்டங்களை அனுபவித்து வருவார்கள். எத்தனை கோவில்களுக்கு சென்று வந்தாலும் பித்ருவிற்கு பரிகாரம் செய்யாமல் பித்ரு தோஷம் நிவர்த்தி ஆகாது.

ஆடி அமாவாசை, தை அமாவாசை, புரட்டாசி அமாவாசை, மகாளயபட்சம் நாட்களிலும், பிரதி மாத அமாவாசைகளிலும் பிதுர்களுக்கு செய்யும் தர்ப்பணம் மற்றும் தானங்கள் நமது அனைத்து தோஷங்களையும் நீக்கும். மிகக்கடுமையான பிதுர் தோஷம் உடையவர்கள் இராமேஸ்வரம் சென்று புண்ணிய தீர்த்தங்களில் நீராடி தர்ப்பணம் செய்வது அவசியம்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி நட்சத்திரங்களில் வரும் அமாவாசையன்று செய்யப்படும் பித்ரு பூஜையானது பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும் கிடைக்காத புண்ணிய காலத்தை தரும்.

அமாவாசை, அவிட்ட நட்சத்திரத்தில் வரும் காலங்களில் பித்ருக்களை நினைத்து அன்னதானம் செய்தால் பித்ரு தோஷம் நீங்கும்.

### பித்ரு சாபம் நீங்க மந்திரம் :

காலையில் எழுந்து பிதுர் காரகனான சூரியனை நோக்கி குளித்து தூய்மையான வஸ்திரத்துடன் நின்று இந்த மந்திரம் சொல்லி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். சூரிய பகவானை மனதில் நிலை நிறுத்தி கூறி வந்தால் பித்ருக்களினால் ஏற்படும் தடை நீங்கி வாழ்வில் நன்மை ஏற்படும்.

ஹரி ஓம் ஹ்ராம் ஹ்ரீம்! சஹசிவ சூரியாய!
வா வா ஐயும் கிலியும் சவ்வும் வசி வசி ஸ்வாஹா

பித்ரு தோஷம் உடையவர்கள் இதனை ஞாயிற்றுக்கிழமை வரும் அமாவாசையன்று தொடங்க வேண்டும். பின் முடிந்தவரை செய்து வர பாவங்கள் அனைத்தும் தீரும். தடைகள் அகன்று சுபகாரியங்கள் நடக்கும்.

### பித்ரு பூஜை செய்ய சிறந்த தலம் :

108 திவ்ய தேசங்களில் ஒன்றான சிவபெருமான் 'நாவாய் முகுந்தன்' என்று பெயர் கொண்டு அருள்பாலிக்கும் இத்தலம் பித்ரு பூஜை செய்ய சிறந்த தலமாக கருதப்படுகிறது. இத்தலம் கேரளாவில் திருநாவாய் என்ற ஊரில் அமைந்துள்ளது.

இத்தல விருட்சத்தின் அடியில் பித்ருக்களுக்கு அமாவாசையன்று அன்னம் வைத்து வழிபடுகின்றனர். இங்கு பித்ரு பூஜை செய்தால் நல்ல பலன் அடையலாம்.

### பித்ரு வழிபாட்டின்போது கவனிக்க வேண்டியவை :

நம் முன்னோர்கள் இறந்த நேரம் மற்றும் திதிகளை குறித்து வைத்து அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டும் பித்ரு தர்ப்பணம் செய்வது நல்லது.

பித்ருக்களுக்கு தர்ப்பணங்கள் செய்யும்போது காலை 7 மணிக்குள் செய்துவிட வேண்டும். அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தின்போது தர்ப்பணம் செய்வது மிகவும் நல்லது. தர்ப்பணங்களை முறைப்படி சரியான நேரத்தில் செய்தால் வாழ்வில் உள்ள கஷ்டங்கள் நீங்கும்.

பித்ருக்களுக்கு தர்ப்பணம் நதிகளின் கரைகளில் கொடுத்தால் அதற்கு அதிக சக்தி உண்டு. பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வது பல யாகங்களை செய்வதை விட மேலானதாகும். ஒரு ஆண்டிற்கு ஒருவர் 96 முறை தர்ப்பணங்கள் செய்ய வேண்டும்.

அமாவாசை மற்றும் சூரிய சந்திர கிரகணங்களில் பித்ருகளுக்கு செய்யும் தர்ப்பணங்களுக்கு மிகுந்த பலன் உண்டு. அமாவாசையன்று அன்னதானம் செய்வது மிகவும் நல்லது.

பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுக்கும் நாட்களில் வெங்காயம், பூண்டு மற்றும் வாசனை திரவியங்களை தவிர்க்க வேண்டும்.

ஒரு வருடம் நாம் பித்ருபூஜை செய்ய தவறிவிட்டால் பித்ருக்களுக்கு மனவருத்தம் ஏற்படும் என கூறப்படுகிறது.

ஆடி அமாவாசை அன்று பித்ருக்களுக்கு செய்யும் தர்ப்பணங்களுக்கு மிகவும் சக்தி உண்டு. இந்த நாளில் பித்ருக்களை சாந்தப்படுத்தினால் வாழ்வில் எல்லா வளமும் பெற்று வாழலாம். இந்த நாளில் தர்ப்பணம் கொடுக்க முன்னோர்களின் ஆசி முழுவதும் நமக்கு கிடைக்கும்.

திருவாதிரை, புனர்பூச நட்சத்திரங்களில் வரும் அமாவாசையன்று தர்ப்பணம் செய்தால் 12 வருடங்கள் பித்ருக்களை திருப்திப்படுத்த முடியும்.

# புத்திர தோஷம்

புத்திர தோஷம் என்பது ஒவ்வொரு லக்னத்திற்கும் வேறுபடும். பொதுவாக எந்த லக்னமாக இருந்தாலும் 5-ம் இடம்தான் புத்திர ஸ்தானத்தை குறிக்கும். ஆண், பெண் இருவருக்கும் நட்சத்திர பொருத்தங்கள் பார்ப்பது மட்டுமின்றி ஜாதக ரீதியாக புத்திர ஸ்தானம் பலமாக உள்ளதா? என ஆராய்வது அவசியம். புத்திர ஸ்தானமான 5-ம் பாவம் பாதிக்கப்பட்டால், குழந்தை யோகம் உண்டாக தடை உண்டாகும்.

## லக்னப்படி புத்திர தோஷம் :

### மேஷ லக்னம் :

மேஷ லக்னத்திற்கு 5-ம் இடம் சிம்மம். சிம்மத்தின் அதிபதியான சூரியன் கன்னி, துலாம், விருச்சிகம், மீனம் போன்றவற்றில் இருந்தால் புத்திர தோஷம் உண்டாகும்.

### ரிஷப லக்னம் :

ரிஷப லக்னத்திற்கு 5-ம் இடமான கன்னியில் சுக்கிரன் இருந்தாலும், புதன் துலாம், மேஷம், தனுசில் இருந்தாலும் புத்திர தடை ஏற்படும்.

### மிதுன லக்னம் :

மிதுன லக்னத்தின் 5-ம் இடம் துலாம். துலாமின் அதிபதி சுக்கிரன். சுக்கிரன் 5-ம் இடமான கன்னியில் இருந்து, துலாமில் சூரியன் இருந்தால், சுக்கிரன் மகரம், ரிஷப ராசியில் இருந்தாலும் புத்திர தோஷம் ஏற்படும்.

### கடக லக்னம் :

கடக லக்னத்தின் 5-ம் இடம் விருச்சிகம். லக்னாதிபதி விருச்சிகத்தில் இருந்து, செவ்வாய் கடகத்தில் நின்றால் புத்திர தடை உண்டு. அதுமட்டுமல்லாமல் விருச்சிகத்தில் புதன் இருந்து, கேது மற்றும் சனி நின்றாலும் அது புத்திர தோஷ ஜாதகமாகும்.

### சிம்ம லக்னம் :

சிம்ம லக்னத்தின் 5-ம் இடம் தனுசு. தனுசுக்கு அதிபதியான குரு 6-ம் இடமான மகரத்திலும், 6-ம் இடத்திற்குரிய சனி தனுசில் இருந்தாலும் அந்த ஜாதக அமைப்பு புத்திர தோஷம் உடையதாகும்.

**கன்னி லக்னம் :**

கன்னி லக்னத்திற்கு 5-ம் இடம் மகரம். மகரத்தில் சனி இருப்பது தோஷமில்லை என்றாலும் சூரியனுடன் இணைந்து இருந்தால் 5-ம் இடமும், 5-ம் பாவாதிபதியும் கெடுகிறார். எனவே இது புத்திர தோஷ அமைப்பாகும்.

**துலாம் லக்னம் :**

துலாம் லக்னத்திற்கு 5-ம் இடம் கும்பம். கும்பத்தின் அதிபதியான சனி மேஷத்தில் இருந்து, கும்பத்தில் செவ்வாய் நின்றாலோ, சனி கன்னி ராசியில் இருந்து கும்பத்தில் குரு பார்வை செய்தாலோ, செவ்வாய் சிம்மத்தில் நின்று பார்த்தாலோ புத்திர தோஷம் ஏற்படும்.

**விருச்சிக லக்னம் :**

விருச்சிக லக்னத்தின் 5-ம் இடம் மீனம். மீனத்தில் சனி இருந்து, மகரத்தில் குரு சஞ்சாரம் செய்தால் தோஷம் ஆகும். மீனத்தில் குரு இருந்து மகரத்தில் சனி நின்றாலும், புத்திர தோஷம் உண்டாகும்.

**தனுசு லக்னம் :**

தனுசு லக்னத்தின் 5-ம் இடம் மேஷம். மேஷத்தின் அதிபதியான செவ்வாயுடன் சனி தொடர்பு ஏற்பட்டாலோ, செவ்வாய் 8-ம் இடத்தில், சனி 5-ம் இடமான மேஷத்தில் இருந்தால் ஜாதகருக்கு புத்திர தோஷம் உண்டு.

**மகர லக்னம் :**

மகர லக்னத்தின் 5-ம் இடம் ரிஷபம். ரிஷபத்தின் அதிபதி சுக்கிரன், கன்னியில் நீசமடைந்து, 5-ல் ராகு-கேது சூரியனுடன் இணைந்திருந்தால் புத்திர தோஷம் ஏற்படும்.

**கும்ப லக்னம் :**

கும்ப லக்னத்திற்கு 5-ம் இடம் மிதுனம். மிதுனத்தில் சந்திரன் இருந்து, மீனத்தில் புதனும் நின்று, பாவிகள் பார்த்தால் புத்திர தடை உண்டாகும்.

**மீன லக்னம் :**

மீன லக்னத்திற்கு 5-ம் இடம் கடகம். கடகத்தில் சூரியன் சஞ்சரித்தாலோ, சுக்கிரன் மற்றும் சனி சஞ்சரித்தாலோ புத்திர தோஷம் உண்டாகும்.

### புத்திர தோஷம் வர காரணம் என்ன?

நமக்கு ஏற்படும் தோஷங்கள் அனைத்தும் நாம் முற்பிறவியில் செய்த கர்மவினைகளை பொறுத்தே அமையும். முற்பிறவியில் பெற்றோர்களை மதிக்காமல் கொடுமைப்படுத்தினால் அவர்களின் சாபத்தால் புத்திர தோஷம் வரும் என ஜோதிட சாஸ்திரங்கள் கூறுகிறது. முன்னோர்களுக்கு முறையாக ஈமக்கடன் செய்யாமல் இருந்தாலும் புத்திர தோஷம் ஏற்படும் என கூறப்படுகிறது.

முற்பிறவியில் ஆன்மீக அடியவர்களையும், மகான்களையும் அவமானப்படுத்தியிருந்தால் புத்திர தோஷம் ஏற்பட்டு, பிறக்கும் குழந்தை வளர்ச்சியற்ற குழந்தையாகவோ, ஊனமுற்ற குழந்தையாகவோ இருக்கும்.

அந்தணரைக் கொன்றாலோ, குலதெய்வ குற்றத்தாலோ, பூ, பிஞ்சு உடன் உள்ள மரங்களை காரண காரியமின்றி வெட்டியதால் உண்டான சாபத்தாலோ புத்திர தோஷம் ஏற்படும். கருச்சிதைவு செய்தாலும், பெற்ற குழந்தையை சரிவர கவனிக்காமல் விட்டாலும் புத்திர தோஷம் உண்டாகும்.

### புத்திரனால் சொத்து இழப்பு :

புத்திர ஸ்தானதிபதி 5,8,12 போன்ற இடங்களில் அமைய பெற்றிருந்தாலும் அசுப பார்வை பெற்றாலும் அவருடைய பிள்ளைகள் கெட்டபுத்தி உள்ளவர்களாகவும், திருடர்களாகவும் இருப்பர்.

அதுபோல 5-ம் வீட்டின் அதிபதி பலவீனம் அடைந்து விரயாதிபதி என்று சொல்லப்படும் 12-ம் வீட்டின் அதிபதியோடு கூடினாலும் புத்திரனால் பணவிரயம், சொத்து இழப்பு போன்ற அனுகூலமற்ற பலன்கள் உண்டாகும்.

புத்திர ஸ்தானதிபதி பாவகிரகத்தின் நவாம்சம் அடைந்தாலும் புத்திரனால் பொருள் இழப்பு உண்டாகும். எச்சரிக்கையாக செயல்பட வேண்டும்.

### புத்திர வழியில் சந்தோஷம் யாருக்கு?

புத்திர ஸ்தானதிபதி, புத்திர ஸ்தானத்தில் அமையப்பெற்று 9-ம் வீட்டின் அதிபதி 9-ல் வீற்றிருந்தால் புத்திர வழியில் சந்தோஷம் ஏற்படும்.

மேலும் 9ம் அதிபதியோடு புத்திர காரகனாகிய குருவும் இணைந்து காணப்பட்டால் புத்திர வழியில் சந்தோஷமும், பூரிப்பும் ஏற்படும்.

### புத்திர வழியில் கெடுதி யாருக்கு?

புத்திர ஸ்தானத்தில் 6-ம் வீட்டின் அதிபதி அமையப்பெற்றாலும் புத்திர ஸ்தானதிபதி பலம் இழந்தாலும் அல்லது பகைவர்களோடு கூடி பலம் குன்றியிருந்தாலும், புத்திர வழியில் சஞ்சலம், பொருள் இழப்பு போன்ற அனுகூலமற்ற பலன்கள் ஏற்படுகிறது.

### புத்திரர்களால் செல்வம், செல்வாக்கு யோகம் யாருக்கு?

மனிதனின் வாழ்க்கையில் பிள்ளைகளால் செல்வம் மற்றும் செல்வாக்கு பெறும் பெற்றோர்கள் யார்? என்றும், அதுபோன்ற யோகம் யாருக்கு? என்றும் ஜோதிடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

ஐந்தாம் அதிபதி நீர் ராசிகளில் நிற்க பெற்றாலும் அல்லது ஐந்தாம் அதிபதி பதினொன்றாம் வீட்டில் அமையப் பெற்றிருந்தாலும் புத்திரர்களால் பெரும் செல்வாக்கும் கிடைக்கப்பெறுவீர்கள்.

சிம்ம வீட்டில் ராகு, செவ்வாய், கேது, சனி போன்ற தீய கிரகம் சஞ்சரிக்காத நிலையில் உள்ள புத்திரர்கள் சூரியன், ராகு இணைந்து சஞ்சரிக்காத நிலையிலும் பெற்றோர்களுக்கு பேரும், புகழும் கிட்டும்.

மேலும் செல்வாக்கும் மிகுந்து சமூகத்தில் மிகச்சிறந்த ஆளாக விளங்கி எல்லாவிதமான சுகங்களையும் பெற்று வாழ்வர்.

இதுபோன்ற நிலைகளில் பிறக்கும் குழந்தைகளினால் பெற்றோர்கள் அனைத்துவிதமான செல்வம், செல்வாக்கு யோகம் பெறும் வாய்ப்புகள் உள்ளது என ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

### புத்திர தோஷம் நீங்க பரிகாரங்கள் :

குருபகவானுக்கு வியாழக்கிழமையன்று அர்ச்சனை செய்து வழிபட்டால் தோஷம் விலகும். முருகனுக்கும், சிவனுக்கும் அபிஷேகங்கள் செய்து வழிபட்டால் தோஷம் நீங்கும்.

ஆறு கார்த்திகை நட்சத்திரங்கள் முருகனுக்கு உகந்தவை. முருகனுக்கு ஆறு முகங்கள் உள்ளதால், சஷ்டி திதி முருகனுக்கு உரியதாக கூறப்படுகிறது. சிவனின் குமாரனான முருகப்பெருமானை வளர்பிறை சஷ்டி திதியில் வணங்கினால், குழந்தைப்பேறு கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

எந்த கிரகம் புத்திர தோஷத்தை உருவாக்கியதோ? அந்த கிரகத்தின் திசை அல்லது புத்திக்காலத்தில் அந்த கிரகத்தின் அதிதேவதைக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால் தோஷம் விலகி புத்திர பாக்கியம் உண்டாகும்.

ஏழை குழந்தைகளுக்கு உடைகள், விளையாட்டு பொருட்கள், நூல்கள் வாங்கி கொடுத்தால் புத்திர பாக்கியம் உண்டாகும்.

பௌர்ணமி, தமிழ் மாதப் பிறப்பு, தமிழ் வருடப் பிறப்பு அன்று அன்னதானம் செய்வதின் மூலமாகவும் வம்ச விருத்தி கிடைக்கும். திருவெண்காடு, திருக்கருகாவூர் தலங்களுக்கு சென்று, உரிய வழிபாடு, பூஜைகள் செய்தால் சந்தான பாக்கியம் கிட்டும்.

குலதெய்வ கோவிலில் அவரவரின் ஜென்ம நட்சத்திரத்தன்று அன்னதானம் செய்தால் புத்திரத்தடை நீங்கும்.

எந்த தோஷமாக இருந்தாலும், அது பிரதோஷத்தில் நீங்கிவிடும். பிரதோஷ நாளில் அபிஷேகம் செய்தால் தோஷம் விலகி புத்திர பாக்கியம் கிடைக்கும்.

சந்தான கோபால கிருஷ்ண யாகம் வீட்டில் வளர்த்து கிருஷ்ணனை வழிபட்டு வந்தாலும் புத்திர பாக்கியம் கிடைக்கப்பெறுவீர்கள்.

**புத்திர தோஷ பாதிப்பு குறைய செல்ல வேண்டிய கோவில்கள் :**

அருள்மிகு சோமநாதர் திருக்கோவில், நீடூர், நாகப்பட்டினம்.

அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோவில், திருவடிசூலம், காஞ்சிபுரம்.

அருள்மிகு அமரபணீஸ்வரர் திருக்கோவில், பாரியூர், ஈரோடு.

அருள்மிகு கல்யாண விகிர்தீஸ்வரர் திருக்கோவில், வெஞ்சமாங்கூடலூர், கரூர்.

அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோவில், உறையூர், திருச்சி.

அருள்மிகு கோணேஸ்வரர் திருக்கோவில், குடவாசல், திருவாரூர்.

அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் திருக்கோவில், இலுப்பைக்குடி, சிவகங்கை.

அருள்மிகு வீரசேகரர் திருக்கோவில், சாக்கோட்டை, சிவகங்கை.

அருள்மிகு திருநேத்திரநாதர் திருக்கோவில், திருப்பள்ளி முக்கூடல், திருவாரூர்.

அருள்மிகு ஆழிகண்டீஸ்வரர் திருக்கோவில், இடைக்காட்டூர், சிவகங்கை.

அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் திருக்கோவில், திருப்பரங்குன்றம், மதுரை.

அருள்மிகு வெக்காளி அம்மன் திருக்கோவில், உறையூர், திருச்சி.

## மாங்கல்ய தோஷம்

மாங்கல்ய தோஷம், பெண் ஜாதகத்தில் மட்டுமே காணப்படும். சில கிரகங்களின் சேர்க்கை, கோச்சார நிலை, தசாபுத்திகள் போன்ற காரணிகளால் திருமணம் தாமதமாகும் அல்லது பெண்ணுக்கு உரிய வயதில் திருமணம் நடக்க தடையாக இருக்கும் கிரக அமைப்புகளைத்தான் மாங்கல்ய தோஷம் என்கிறோம்.

### மாங்கல்ய தோஷம் என்றால் என்ன?

பெண் ஜாதகத்தில் லக்னத்தில் இருந்து 8-ஆம் இடம் தான், மாங்கல்ய ஸ்தானம். இதில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது ஆகிய கிரகங்கள் இருப்பது நல்லதல்ல.

எட்டாம் அதிபதி பலம் குறைந்து காணப்பட்டாலும் மாங்கல்ய தோஷம் ஏற்படும். பெண்கள் ஜாதகத்தில் எந்தவொரு இடத்திலும் செவ்வாய், கேது இணைந்து நிற்பது அவ்வளவு நன்மை அல்ல.

8-ஆம் இடத்தில் மேலே சொன்ன 5 கிரகங்கள் இருந்து, அந்த இடம், அக்கிரகங்களின் சொந்த வீடாக, உச்சம் பெற்று இருந்தால் தோஷம் குறையும். அவ்வீட்டில் குரு, சுக்கிரன் பார்வை இருந்தால் தோஷம் விலகும்.

### மாங்கல்ய தோஷம் எதனால் வருகிறது?

சென்ற பிறவிகளில் நாம் செய்த பாவ புண்ணியங்களின் அடிப்படையிலேயே இந்தப் பிறவியில் நமது ஜாதகக் கட்டங்கள் அமைகின்றன. முற்பிறவியில் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்த தம்பதிகளை பிரிப்பதினால் ஏற்படுவது மாங்கல்ய தோஷமாகும். திருமணமான ஆண் மகனை காம இச்சைகளால் கவர்ந்து இழுக்கும் பெண்களுக்கு மாங்கல்ய தோஷம் ஏற்படுகின்றது.

### திருமணத்திற்கு முன் கன்னி பெண்களுக்கு மாங்கல்ய தோஷம் கழிக்கும் முறை :

ஒரு புதிய பொட்டு தாலி தங்கத்தில் வாங்கி தங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்தின் பாதத்தில் அந்த தாலியை வைத்து பூஜை செய்து ஒரு மஞ்சள் கயிற்றில் கோர்த்து எடுத்து கொள்ளவும். ஆலயத்திலோ அல்லது வீட்டிலோ தங்களது இஷ்ட தெய்வங்களை மனதில் வழிபாடு செய்துவிட்டு ஒரு சுமங்கலி பெண் இந்த மங்கள தாலியை திருமணம் தடைபட்டு வருகின்ற பெண்ணிற்கு கட்ட வேண்டும்.

இரண்டு மணி நேரம் கழித்து அந்த தாலி கட்டப்பட்ட அந்த கன்னி பெண்ணை மீண்டும் அமர செய்து தாலி கட்டிய அதே சுமங்கலி பெண்ணின் கையால் அந்த மாங்கல்யத்தை அவிழ்த்து விடவும். அதன் பிறகு அந்த கன்னி பெண் குளிக்க வேண்டும்.

அதே சமயத்தில் தோஷம் கழிக்கும்போது உடுத்தி இருந்த உடைகளை மீண்டும் உடுத்தக்கூடாது. அதனால் அந்த உடைகளை வீசி எறியவும். அதன்பிறகு அந்த கன்னி பெண் கழுத்தில் கட்டிய மாங்கல்யத்தை குலதெய்வம் (பெண் கடவுளுக்கு) அல்லது தங்களுக்கு இஷ்டமான பெண்கடவுளுக்கு சீர் வரிசைகளான மஞ்சள், குங்குமம், வளையல், புடவை, பழங்கள், வெற்றிலை பாக்கு, சந்தனம், இனிப்பு ஆகிய ஒன்பது மங்கள பொருட்களுடன் அந்த தாலியையும் வைத்து இஷ்ட தெய்வத்திற்கு காணிக்கையாக தர வேண்டும்.

அல்லது அந்த தாலியை உண்டியலில் காணிக்கையாக செலுத்தி விடலாம். இந்த தோஷம் கழிக்கும் நாள் செவ்வாய் அல்லது வெள்ளி இல்லாமல் இருப்பது நல்லது. இப்படி தோஷம் கழித்துவிட்டால் திருமணம் ஆகாத பெண்களுக்கு திருமணம் விரைவில் நடைபெறும். இது பொதுவான முறை ஆகும். அவரவர் ஜாதகத்திற்கு ஏற்ப நிவர்த்தி செய்ய ஜோதிடரை அணுகவும்.

### மாங்கல்ய தோஷ பரிகாரம் :

வன்னி மர விநாயகரை மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்கள் அன்று மனமுருகி வழிபட்டு அன்றைய தினம் ஒன்பது கன்னி பெண்களுக்கு வஸ்திர தானம் செய்தால் மாங்கல்ய தோஷம் நீங்கும்.

திருமணத்திற்கு பிறகு மாங்கல்யத்துக்கு ஆபத்து வருமோ? என்று பயப்படும் பெண்கள் செவ்வாய்க்கிழமை எமகண்டத்தில் பைரவருக்கு சந்தனக் காப்பு செய்து, விரலி மஞ்சள் மாலை சூட்டி, மஞ்சள் கயிறு வைத்து, சர்க்கரைப் பொங்கல், பால் பாயாசம், பானகம், நிவேதனம் செய்து, சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம் கொடுத்து, பைரவரை வழிபட வேண்டும்.

### பெண்களின் மாங்கல்ய தோஷத்திற்கு ஸ்ரீ மகாலட்சுமி பூஜை சக்திவாய்ந்த பரிகாரம்.

ராகு காலத்தில் துர்க்கையம்மனுக்கு எலுமிச்சையில், நெய் விளக்கேற்றி வழிபாடு செய்யலாம். அம்மனுக்கு எலுமிச்சை மாலை அணிவிக்கலாம். எலுமிச்சை அன்னம் படைத்து வழிபாடு தோஷ நிவர்த்திக்கு சிறப்பு.

நவராத்திரி தினங்களில் அம்பிகையை வழிபட்டு சுமங்கலி பெண்களுக்கு தேவையான மங்களப் பொருட்களை கொடுப்பதன் மூலம் மாங்கல்ய தோஷம் குறையும்.

எந்த கிரகத்தினால் மாங்கல்ய தோஷம் ஏற்பட்டு உள்ளதோ அந்த கிரகத்திற்கு பரிகாரம் செய்து வழிபட்டால் தோஷ நிவர்த்தி ஆகும்.

### மாங்கல்ய தோஷத்திற்கு செல்ல வேண்டிய கோவில்கள் :

தஞ்சாவூர் மாவட்டம் திருமங்கலக்குடியில் எழுந்தருளியுள்ள மங்களநாதரை சென்று வணங்கினால் மாங்கல்ய தோஷ தாக்கம் குறையும்.

மேலும்

பிரளயநாதர் திருக்கோவில், சோழவந்தான், மதுரை

கல்யாணராமர் திருக்கோவில், புதுக்கோட்டை

வல்லப விநாயகர் திருக்கோவில், கீழவாசல், தஞ்சாவூர்

அபயவரத ஆஞ்சநேயர் திருக்கோவில், திண்டுக்கல்

விஸ்வநாதர் திருக்கோவில், சாத்தூர், விருதுநகர்

நாகம்மாள் திருக்கோவில், பாலமேடு, கெங்கமுத்தூர், மதுரை

தேவி கருமாரியம்மன் திருக்கோவில், மதுரை

**திருமணமானவர்களுக்கு மாங்கல்யம் பலம் பெற ஸ்லோகம் :**

சந்த்ராபீடாம் சதுரவதனாம் சஞ்சலா பாங்கலீலாம்

குந்தஸ்மேராம் குசபரநதாம் குந்தளோத்தூத ப்ருங்காம்

மாராராதே: மதனஸிகினம் மாம்ஸளம் தீபயந்தீம்

காமாக்ஷீம் தாம் கவிகுலகிராம் கல்பவல்லீமுபாஸே

## சர்ப்ப தோஷங்கள்

அனைத்து கிரகங்களும் ராகு-கேதுவுக்கு இடையில் அமைந்து, ஜாதகத்தில் பாதி கட்டங்கள் காலியாக இருந்தால், அது பூரண கால சர்ப்ப தோஷமாகும். ஏதேனும் மூன்று கிரகம் வெளியே அமைந்தாலும் அது கால சர்ப்ப தோஷம் ஆகாது. லக்னம், ஏழாம் வீடு தவிர மற்ற வீடுகளில் அமரும் ராகு-கேதுக்களை பொறுத்து சர்ப்ப தோஷம் பல வகைப்படும்.

**அனந்த கால சர்ப்ப தோஷம் :**

ராகு முதல் வீட்டிலும், கேது ஏழாம் வீட்டிலும் இருக்க, மற்ற கிரகங்கள் இவர்களுக்கிடையே அமைவதே அனந்த கால சர்ப்ப தோஷம். இதை விபரீத கால சர்ப்ப தோஷம் எனவும் கூறலாம். இவர்கள் பல இடையூறு, கஷ்டங்களுக்கு பிறகு தங்கள் சொந்த முயற்சியால் வாழ்க்கையில் முன்னுக்கு வருவர். எனினும் திருமண காலத்தில் சில இடையூறுகள் உண்டாகும்.

**சங்கசூட சர்ப்ப தோஷம் :**

ராகு 9ஆம் வீட்டிலும், கேது 3ஆம் வீட்டிலும் இருக்கும் ஜாதக அமைப்புடையோர் பொய் கூறுவர். முன்கோபியும்கூட, வாழ்க்கை ஏற்ற-தாழ்வு நிறைந்ததாக இருக்கும்.

**கடக சர்ப்ப தோஷம் :**

ராகு 10ல் இருக்க, கேது 4ல் இருந்தால் சட்ட சிக்கல்கள் வரும். அரசாங்கத் தண்டனை உண்டு. 10ல் இருக்கும் ராகு இருட்டு சம்பந்தமான தொழிலைக் கொடுப்பர். புகைப்படம், எக்ஸ்ரே போன்ற தொழில் கிடைக்கும். ராகுவுக்கு இடம் கொடுத்த ராசியதிபதி கெட்டால் சட்டத்திற்கு புறம்பான வேலைகளை செய்ய தூண்டுவார்.

**குளிகை சர்ப்ப தோஷம் :**

ராகு 2ஆம் வீட்டிலும், கேது 8ம் வீட்டிலும் இருந்தால் உடல்நலம் கெடும். இழப்புகள், விபத்துக்கள் நேரும். பொருளாதார பாதுகாப்பற்ற நிலை ஏற்படும். ராகுவுக்கு இடம் கொடுத்த ராசியதிபதி பலம் பெற்றிருந்தால் வெளிநாட்டு பயணம் கிடைக்கும்.

**வாசுகி சர்ப்ப தோஷம் :**

ராகு 3-ம் வீட்டிலும், கேது 9-ம் வீட்டிலும் இருந்தால் இந்த தோஷம் ஏற்படும். தொழிலில் பிரச்சனைகள் ஏற்படும். காது மற்றும் இளைய சகோதரர்களால் பிரச்சனைகள் உருவாகும்.

**சங்கல்ப சர்ப்ப தோஷம் :**

ராகு 4-ல், கேது 10-ல் இருந்தால் ஜாதகரின் வேலை, தொழில் கெடும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவைப்படும்.

**பத்ம சர்ப்ப தோஷம் :**

ராகு 5-ம் வீடு, கேது 11-ஆம் வீட்டில் இருந்தால் குழந்தைகள் பிறப்பதில் பிரச்சனை ஏற்படும். இதனுடன் சந்திரன் கெட்டால் ஆவித் தொல்லை ஏற்படும். மேலும் நண்பர்களால் ஏமாற்றமும், நோய் உண்டானால் குணமடைய தாமதம் ஆகும்.

**மகா பத்ம சர்ப்ப தோஷம் :**

ராகு 6-ல், கேது 12-ல் இருந்தால் நோயினால் தொல்லை உண்டாகும். எதிர்காலம் இடையூறுகள் நிறைந்ததாக இருக்கும். 6-ம் அதிபதியை பொறுத்து நோய் குணமாகுதலும், எதிரிகளை வெற்றி கொள்ளுதலும் நடக்கும்.

### தக்ஷக சர்ப்ப தோஷம் :

கேது லக்னத்தில், ராகு 7-ல் இருந்தால் முன்யோசனையும், யூகம் செய்யும் ஆற்றலும் உடையவர். தன் செல்வத்தை மது, மாதில் இழப்பார். திருமண வாழ்வில் தொல்லை ஏற்படும்.

### கார்கோடக சர்ப்ப தோஷம் :

ராகு 8-ல், கேது 2-ல் இருந்தால் கார்கோடக சர்ப்ப தோஷத்தை உண்டாக்கும். தந்தையின் சொத்து கிடைக்காது. எதிரிகள் அதிகமாக இருப்பர்.

### விஷ்தார சர்ப்ப தோஷம் :

ராகு 11-ல், கேது 5-ல் இருந்தால் குழந்தைகள் தொடர்பான பிரச்சனைகளை உண்டாக்கும். அடிக்கடி பயணம் செய்வார். வாழ்க்கையின் பிற்பகுதி நன்றாக இருக்கும்.

### சேஷநாக சர்ப்ப தோஷம் :

ராகு 12-ல், கேது 6-ல் இருந்தால் உடல்நலத்தில் பிரச்சனைகள் ஏற்படும். வழக்குகளில் சிக்கல் உண்டாகும். எதிரிகள் தொல்லை அதிகரிக்கும்.

### சர்ப்ப தோஷம் வரக் காரணம் என்ன?

நமக்கு இந்த பிறவியில் தோஷங்கள் அமையப்பெற்ற ஜாதகம் வரக் காரணம் நாம் முற்பிறவியில் செய்த கர்ம வினைகளே ஆகும். முற்பிறவியில் பெரியோர்களை துன்புறுத்தினாலோ அல்லது இரண்டு பாம்புகள் இணைந்திருக்கும் போது அவற்றைக் கொல்ல முயலும்போது ஒன்றை மட்டும் கொன்றால் (மற்றது தப்பித்துவிட்டால்) அது மிக கொடூரமான பாவமாகும். இப்பாவம் செய்தவர்கள்தான் மறுபிறவியில் லக்னத்தில் ராகு அல்லது கேது தனித்திருக்கப் பிறக்கின்றனர்.

வயல்வெளிகளில் அமைக்க பெற்றுள்ள பாம்பு புற்றுகளை அழிப்பதாலும், புற்றுகள் அமையப்பெற்றுள்ள இடத்தை அசுத்தம் செய்தாலும், வாயில்லா ஜீவன்களை துன்புறுத்தி அதில் மகிழ்ச்சி காண்பதாலும் மற்றும் மாந்திரீக கலைகளை தவறான விதத்தில் பயன்படுத்திவதாலும் ராகு-கேது தோஷம் ஏற்படுகின்றது.

### பரிகாரங்கள் :

தங்கம் நிரம்பிய குடம் அல்லது தெய்வீகம் நிறைந்த பொருட்களுடன் கும்பம் வைத்து வழிபட்டால் தோஷம் நீங்கி செல்வ செழிப்பு உண்டாகும்.

பட்டு சார்த்துதல், தானியம் மற்றும் திவ்ய ஆபரணங்கள் வழங்கினால் தோஷம் விலகி கல்வி மற்றும் சுபிட்ச வாழ்வு உண்டாகும்.

உப்பு காணிக்கை செலுத்தினால் சர்ப்ப தோஷம் விலகி உடல்நலம் பெறும்.

மஞ்சள் காணிக்கை செலுத்தினால் சர்ப்ப தோஷத்தின் விஷத்தன்மை நீங்கும்.

நல்ல மிளகு, கடுகு, சிறு பயிறு போன்றவற்றை நைவேத்தியமாக செலுத்தினால் நாக தோஷத்திலிருந்து விடுபட்டு ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

மஞ்சள் பொடி, பால் நைவேத்தியம் படைத்தால் தோஷத்தினால் எற்பட்ட குறைகள் நீங்கி குழந்தை பாக்கியம் உண்டாகும்.

தோஷ பரிகாரத்திற்கு மஞ்சள் பொடி காணிக்கை, பால்-பழம், பால் பாயாசம், அப்பம், இளநீர், பூக்கள், அவல் நைவேத்தியம் செய்ய வேண்டும்.

### பரிகார ஸ்தலங்கள் :

குன்றத்தூரில் சேக்கிழார் பெருமான் ஏற்படுத்திய திருத்தலம் ராகு பகவானுக்கு பரிகாரத்தலமாக அமைந்துள்ளது. ராகு-கேது பிடிக்குள் மற்ற ஏழு கிரகங்களும் அகப்பட்டு தன் பலத்தை இழப்பது பெரிய தோஷம். இத்தோஷம் உள்ளவர்கள் இத்தலத்திற்கு வந்து ராகுகால பூஜையில் கலந்து கொண்டு பரிகாரம் செய்தால் தோஷ நிவர்த்தியடைந்து நன்மையடையலாம்.

காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோவிலுக்கு அருகேயுள்ள தலத்தில், மாகாளன் எனும் நாகம் காளத்திநாதர் ஆணைப்படி இங்கு லிங்கம் அமைத்து பூஜித்தது. மூலவர் மகாகாளேஸ்வரர். இது, ராகு-கேது பூஜித்த தலமும் ஆகும். இங்கு வழிபட்டு வந்தால் சர்ப்ப தோஷம் நீங்கும்.

ஆதிசேஷன் பூஜித்து அருள் பெற்ற தலம் ஸ்ரீவடிவுடையம்மன் உடனுறை ஸ்ரீபடம்பக்கநாதர் மற்றும் ஸ்ரீமானிக்கதியாகேஸ்வரை வணங்கினால் ராகு-கேதுவால் உண்டான தோஷம் விலகும். இது சென்னையில் உள்ள திருவொற்றியூரில் அமைந்துள்ளது.

## களத்திர தோஷம்

களத்திரம் என்ற சொல்லானது பெண்ணுக்கு கணவனையும், ஆணுக்கு மனைவியையும் குறிக்கும் சொல்லாகும். களத்திர ஸ்தானம் என்பது லக்னத்திற்கு 7வது இடத்தை குறிக்கும். இந்த 7வது வீடு பாவக் கிரகங்களால் பாதிப்படைந்து இருக்கக்கூடாது.

### களத்திர தோஷம் என்றால் என்ன?

லக்னம் இருக்கும் இடத்திலிருந்து 1,2,4,7,8,12 ஆகிய இடங்களில் சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது போன்ற கிரகங்கள் இருந்தாலோ அல்லது சேர்ந்திருந்தாலோ இந்த அமைப்பு கொண்ட ஜாதகம் களத்திர தோஷ ஜாதகம் ஆகும்.

4-ம் இடத்தில் சனி, செவ்வாய், ராகு அல்லது கேது சேர்ந்திருந்தாலும், 2,7-ம் இடத்து அதிபதிகளும், சுக்கிரனும் கூடி பாவக் கிரகங்களுடன் சேர்ந்து 6,8,12-ம் இடத்தில் இருந்தாலும் களத்திர தோஷமாகும். சுக்கிரனுடன் சூரியன், சனி அல்லது ராகு, கேதுவுடன் கூடி இருந்தாலும், 7-ம் இடம் பாவக் கிரகங்களின் வீடாகி அதில் சுக்கிரன் இருந்தாலும் மிகவும் பாதகமான களத்திர தோஷம் ஆகும்.

### களத்திர தோஷம் வர காரணம் என்ன?

களத்திர தோஷம் ஏற்பட முன் ஜென்மத்தில் செய்த கர்ம வினைகளே காரணம் ஆகும். முற்பிறவியில் தன்னை நம்பி வந்த வாழ்க்கை துணையை ஏமாற்றிய காரணத்தால் ஏற்படுவது களத்திர தோஷமாகும்.

### களத்திர தோஷம் என்ன செய்யும்?

களத்திர தோஷ ஜாதக அமைப்பு உடையவர்களுக்கு திருமணம் மிகவும் தாமதமாக நடைபெறும் அல்லது திருமணம் நடக்காமல் போகவும் அதிக வாய்ப்புகள் உள்ளது.

அப்படியே திருமணம் நடந்தாலும் திருமண வாழ்வில் அதிக பிரச்சனைகளை சந்திக்க நேரிடும்.

திருமண வாழ்வில் அதிக போராட்டங்கள் ஏற்படும். தம்பதியர்களிடையே மண முறிவை ஏற்படுத்தும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போகும் தன்மை இருக்காது.

களத்திர தோஷம் உள்ள ஜாதகர்கள் அதே ஜாத அமைப்புள்ள ஜாதகரை திருமணம் செய்து கொண்டால் திருமண வாழ்வு சிறப்பாக அமையும்.

இந்த தோஷம் உள்ளவர்கள் அடிக்கடி குலதெய்வ கோவிலுக்கு சென்று முறைப்படி வழிபாடு செய்ய வேண்டும்.

களத்திர தோஷம் பெற்று திருமணம் அமையாமல் தவிப்பவர்களும் சுக்கிர ஸ்தலமான ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் சேர்த்தி சேவையை தரிசித்தால் களத்திர தோஷம் நீங்கி விரைவில் திருமணம் நடைபெறும்.

வீட்டில் சுமங்கலி பூஜை செய்வது நற்பலன்களை கொடுக்கும்.

## பிரம்மஹத்தி தோஷம்

ஒருவரின் ஜாதகத்தில் குரு மற்றும் சனி சேர்க்கை பெற்றாலும், குரு பகவானை சனி பகவான் எங்கிருந்து பார்வை செய்தாலும், குருவின் சாரத்தில் சனியும்-சனியின் சாரத்தில் குருவும் இருத்தலும், குரு மற்றும் சனி கோள்கள் ஒன்றையொன்று நோக்கினாலும் அது பிரம்மஹத்தி தோஷம் உள்ள ஜாதகம் ஆகும். இந்த தோஷமானது ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் வரும்.

## பிரம்மஹத்தி தோஷம் எதனால் வருகிறது?

பிரம்மன் படைத்த ஒரு உயிரை கொல்வதால்தான் இந்த பிரம்மஹத்தி தோஷமானது ஏற்படுகிறது.

பொருளுக்காக ஒரு எளியவரை கொல்லுதல், வேதத்தின் உட்பொருள் அறிந்த அந்தணர்களை வதைத்தல் அல்லது துன்புறுத்துதல் மற்றும் ஒருவரிடம் தற்கொலை எண்ணங்களை உருவாக்குவதில் போன்றவற்றால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்படுகிறது.

ஏதேனும் ஒரு பொருளிற்கோ, பொன்னிற்கோ ஆசைப்பட்டு ஒரு உயிரை வதம் செய்தால் இந்த தோஷமானது பற்றிக் கொள்ளும்.

பெற்றோர்களை கவனிக்காமல் தனியாக விட்டுவிட்டாலும் இந்த தோஷம் ஏற்படும். இந்த பாவமானது நமது தலைமுறைகளையும் தொடரும்.

ஒருவரை அவமானம் செய்து தற்கொலைக்கு தூண்ட முயற்சிப்பது பிரம்மஹத்தி தோஷத்தை குறிக்கும்.

## பிரம்மஹத்தி தோஷம் என்ன செய்யும்?

பிரம்மஹத்தி தோஷம் உடைய ஜாதகர்கள் வாழ்வில் நிம்மதி இருக்காது. தேவையில்லாத எதிர்மறை எண்ணங்கள் அவர்களை துன்புறுத்தும்.

இந்த தோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருமண தாமதம் ஏற்படும்.

கல்வி, வேலை மற்றும் குழந்தைபேறு இவற்றில் பல பிரச்சனைகள் ஏற்படும். அதிக அளவில் சம்பாதித்தாலும் கையில் பணம் தங்காது.

கனவுத் தொல்லைகள், தாங்கள் நடத்திவரும் தொழிலுக்கு வேலைக்காரர்கள் கிடைக்காத நிலை போன்ற பல குழப்பங்கள் இருந்து வரும்.

நல்லறிவு, நல்ல பழக்கங்கள், நல்ல உழைப்பு போன்றவை இருக்கும். ஆனால், தகுந்த பலன்கள் கிடைக்காது.

## பிரம்மஹத்தி தோஷத்தால் பாதிக்கப்பட்ட கடவுள்கள் :

பைரவர் - பிரம்மனின் தலையை கொய்தமையால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.

சப்தகன்னியர் - மகிஷாசுரன் எனும் அரக்கனை கொன்றமையால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.

இராமர் - இராவணனை கொன்றதால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.

வீரசேனன், வரகுண பாண்டியன் - பிராமணனை கொன்றதால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது.

**பிரம்மஹத்தி தோஷ பரிகாரங்கள் :**

கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூர் கோவிலுக்குச் சென்று, பிரம்மஹத்தி தோஷ நிவாரணம் செய்து, ஒரு வாசல் வழியே நுழைந்து வேறொரு வாசல் வழியே வெளியே வர வேண்டும். அங்கே அதற்குரிய யாகம் நடத்த வேண்டும். இது மிகவும் சிறந்த பரிகாரமாகும்.

பிரம்மஹத்தி தோஷத்திற்கு குலதெய்வத்தை முதலில் வணங்கி விட்டு, ராமேஸ்வரம், காசி, கயா, கங்கை உள்ளிட்ட புனித ஸ்தலங்களில் நீராடி, இறைவனை வணங்கி வந்தாலும் பலன் பெறலாம்.

அமாவாசை தினத்தன்று, மாலை சிவன் கோவிலுக்கு சென்று ஒன்பது சுற்றுகள் சுற்றி வணங்கி வர வேண்டும். இதுபோல ஒன்பது அமாவாசை தினங்களில் சுற்றிவந்து வணங்கி சிவனுக்கு மூன்று அகல் விளக்கு ஏற்றி, அர்ச்சனையும், அபிஷேகமும் செய்து வந்தால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்.

பழமையான சிவன் கோவில்களில் அனைத்து சன்னதிகளிலும் பஞ்சக்கூட்டு எண்ணெய் கொண்டு விளக்கேற்றி வந்தால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும் என்பது ஐதீகம்.

ராமேஸ்வரம் கடலில் நீராடி அனைத்து தீர்த்தங்களிலும் குளித்து ஜடாமகுடேஸ்வரர் கோவிலில் உள்ள ஜடாமகுட தீர்த்தத்தில் நீராடி ஜடாமகுடேஸ்வரரை வழிபட்டு வந்தால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்.

திருவண்ணாமலை அருகில் வில்வராணி எனும் ஊரில் அமைந்துள்ள சிவசுப்பிரமணிய சுவாமி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இவரை வணங்கினால் பிரம்மஹத்தி தோஷம் நீங்கி நற்பலனை பெறலாம்.

**மேலும் செல்ல வேண்டிய கோவில்கள் :**

பிரம்மசிரகண்டீஸ்வர் திருக்கோவில், கண்டியூர், தஞ்சாவூர்.

திருமறைக்காடர் திருக்கோவில், வேதாரண்யம், நாகப்பட்டினம்.

ஆலந்துறையார் திருக்கோவில், கீழப்பழுவூர், அரியலூர்.

கொழுந்தீஸ்வரர் திருக்கோவில், கோட்டூர், திருவாரூர்.

திருநோக்கிய அழகிய நாதர் திருக்கோவில், திருப்பாச்சேத்தி, சிவகங்கை.

அமணீஸ்வரர் திருக்கோவில், மஞ்சநாயக்கனூர், கோயம்புத்தூர்.

**பிரம்மஹத்தி தோஷம் நீங்க மந்திரம் :**

ஸுப்ரஹ்மண்யஸ்ய மஹிமா

வர்ணிதும் கேந சக்யதே !

யத்ரோச் திஷ்டமபி பஷ்டம்

ச்விதரிணச் சோதயத்ய ஹோ !

ப்ரஹ்ம ஹத்யா தோஷ சேஷம்

ப்ராஹ்மணானாமயம் ஹரன் !

விரோதேது பரம்கார்யம்

இதிந்யாய மானயத்

இந்த மந்திரத்தை சொல்லி முருகனை வழிபட்டால் இந்த தோஷம் நீங்கும்.

## ராகு-கேது தோஷம்

ராகு-கேது என்பவை நிழல் கிரகங்கள் என்று ஜோதிடத்தில் சொல்லப்படுகின்றன. நிழல் கிரகங்களாக இருந்தாலும் மிகவும் வலிமை வாய்ந்தவை ஆகும். பொதுவாக ஒருவருடைய ஜாதகத்தில் ராகு-கேது எந்த கிரகங்களுடன் சேர்ந்து இருக்கிறதோ, அந்த கிரகத்தின் அடிப்படை குணத்தை பிரதிபலிக்கும் தன்மை கொண்டவை. ராகுவும், கேதுவும் நல்ல கிரகங்களுடன் சேர்ந்தால் நல்ல பலனும், தீய கிரகங்களுடன் சேர்ந்தால் தீய பலனும் அளிக்கும் குணமுடையவை ஆகும்.

ஒருவரது ஜாதகத்தில் ராகு-கேது தோஷம் இருந்தால் திருமணம் தாமதமாகும். தொழிலில் திடீர் முடக்கம் ஏற்படும். தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் தொந்தரவு தரும். திருமணமானவர்களுக்கு குழந்தை பாக்கியம் தள்ளிப்போகும்.

## ராகு-கேது தோஷம் ஏற்படுவது ஏன்?

நம் மூதாதையர்கள் பல்வேறான உதவிகள் செய்து புண்ணியங்களை நமக்கு தேடிக் கொடுத்திருந்தாலும் அவர்கள் மற்றவர்களுக்கு செய்த சில பாவங்களை எடுத்துக் காட்டவே அடுத்த தலைமுறையினருக்கு ராகு-கேது தோஷம் ஏற்பட ஒரு காரணமாக அமைகின்றது.

வயதான பெண்களை சரியாக கவனிக்காமல் கொடுமைப்படுத்தினால் அவர்களின் தலைமுறைக்கு ராகு-கேது தோஷம் ஏற்படுகிறது. இது குறிப்பிட்ட காலத்தில் திருமணம் நடைபெறாமல் தடுக்கவும், களத்திர ஸ்தானத்தில் ராகு ஜென்மத்தில் கேதுவாக மாறி கெடுதலைச் செய்கிறது.

கோவில் இடங்களை ஆக்கிரமித்து ஆண்டவனின் கோபத்திற்கு ஆளானதால் இந்த தோஷம் ஏற்படலாம்.

தம்பதிகளை ஏதேனும் பகையால் பிரித்தால் அவர்களின் மூன்றாம் தலைமுறையினருக்கு இந்த தோஷம் ஏற்படலாம்.

மூதாதையர்கள் குழந்தைகளை கொடுமைப்படுத்தினாலோ அல்லது துன்புறுத்தினாலோ, அக்குழந்தைகள் விட்ட ஒவ்வொரு துளி கண்ணீரும் அவர்களின் தலைமுறைக்கு ராகு-கேது தோஷமாக விஸ்வரூபம் எடுக்கும்.

குடும்பங்களை பிரித்து வயதானவர்களிடம் சாபம் வாங்கியதினால் சாபம் நிறைவேற குடும்ப ஸ்தானத்தில் ராகுவும், அஷ்டத்தில் கேதுவுமாக இருந்து மூன்றாவது தலைமுறையினரது இல்வாழ்க்கையை நிம்மதி இல்லாமல் இந்த ராகு-கேது கெடுக்கும்.

சகோதரர்களை மதிக்காமலும், உண்மை பாசத்தை உதறித்தள்ளி கைவிட்டாலோ அல்லது அவர்களை ஏமாற்றியதாலோ அவர்கள் இட்ட சாபம் ஒருவருக்கு மூன்றாவது வீட்டில் ராகுவும், தர்ம கர்மா ஸ்தானமாக 9-ம் வீட்டில் கேதுவும் இருக்கிறார்கள்.

நம்பிய நண்பர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து அவர்களின் சொத்தை அபகரித்தால் முன் ஜென்மத்தில் செய்தமைக்காக தற்போது ஆறாம் வீட்டில் ராகு அல்லது கேது அல்லது பனிரெண்டாம் வீட்டில் ராகு அல்லது கேது இருக்கலாம்.

வேலை செய்தபோது கூலி கொடுக்காமல் ஏமாற்றினாலோ அல்லது மற்றவர்கள் வேலையை பறித்த பாவமும் சேர்ந்து ராகு-கேதுவாக மாறி ஜீவன ஸ்தானத்தில் அமர்ந்து தொழிலில் முன்னுக்கு வர முடியாமல் ராகு 4-ல் அல்லது 10ல், கேது 4ல் அல்லது 10ல் அமர்ந்து தடுக்கின்றது.

சொத்துக்களை ஏமாற்றி பறித்து பெற்ற தாயின் சாபத்தையும் முன் ஜென்மத்தில் அந்த அன்னை இட்ட கண்ணீர் ராகு-கேது தோஷத்தை ஏற்படுத்துகிறது.

**ராகு-கேதுக்கு எப்போது பரிகாரம் செய்ய வேண்டும்?**

செவ்வாய் திசையில் ராகு புத்தி, கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

ராகு திசையில் ராகு புத்தி, கேது புத்தி நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

சந்திர திசையில் ராகு புத்தி, ராகு அந்தரம் கேது புத்தி, கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

குரு திசையில், கேது புத்தி, ராகு புத்தி நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

சூரிய திசையில், எந்த புத்தி நடந்து கொண்டிருந்தாலும் அதில் ராகு அல்லது கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

சனி திசையில் ராகு, கேது புத்தி-சூரிய புத்தியில் ராகு, கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

கேது திசையில் சந்திர புத்தி, சூரிய புத்தி, புதன் புத்தியில் ராகு-கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

புதன் திசையில் சந்திர-புத்தி, ராகு-கேது அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

சுக்கிர திசையில் குருபுத்தி-கேது ராகு அந்தரம் நடக்கும்போது பரிகாரம் செய்யலாம்.

**ராகு-கேது பரிகாரங்கள் :**

கேதுவின் அருள் பெற விநாயகர், சித்ரகுப்தர் ஆகிய தெய்வங்களை வழிபடலாம்.

ராகுவின் அருள் பெற துர்க்கை அம்மன், கருமாரி அம்மன் ஆகிய தெய்வங்களை வழிபடலாம்.

காஞ்சிபுரத்தில் சித்ரகுப்தருக்கு தனி ஆலயம் உள்ளது. அங்கு கேது பரிகார பூஜை செய்யலாம்.

புற்று இருக்கும் அனைத்து அம்மன், காளி கோவில்களிலும் ராகு பரிகார பூஜைகள் செய்யலாம்.

நவகிரகத்தில் உள்ள ராகு- கேதுவுக்கும் விளக்கேற்றலாம்.

சிவன் கோவிலில் உள்ள விஷ்ணு துர்க்கையை ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் வழிபட வேண்டும்.

பெருமாள் கோவிலில் உள்ள விஷ்ணு, துர்க்கையை புதன்கிழமை ராகுகாலத்தில் வணங்குவது நல்லது.

சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகருக்கு அபிஷேக, ஆராதனைகள், அர்ச்சனை செய்து வழிபடவும்.

தேய்பிறை அஷ்டமியில் காலபைரவருக்கு வடைமாலை சாற்றி வழிபாடு செய்யலாம்.

ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாற்றி வழிபடவும்.

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் விநாயகருக்கு அருகம்புல் சாற்றி வழிபடவும்.

பசுமாட்டிற்கு வாழைப்பழம் கொடுத்து வழிபடலாம்.

பாம்பு புற்றுள்ள கோவில்களுக்கு சென்று வழிபாடு நடத்தலாம்.

ஆஞ்சநேயருக்கு சனிக்கிழமை காலை ஒருபொழுது மட்டும் விரதம் இருக்கலாம்.

வாரந்தோறும் துர்க்கை அல்லது காளிக்கு எலுமிச்சம் பழம் மாலை சாற்றி வழிபடவும். எலுமிச்சம் பழம் மாலையில் 27 அல்லது 45 என்ற எண்ணிக்கையில் பழம் இருக்க வேண்டும்.

அரசு வேம்பு மரம் உள்ள விநாயகரை சனிக்கிழமை காலை ராகு காலத்தில் சுற்றி வந்து வழிபடவும்.

**ராகு-கேது பரிகார ஸ்தலங்கள் :**

கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் ராகு ஸ்தலமாகும்.

நவதிருப்பதிகளில் தொலைவில்லி மங்களம் பரிகார ஸ்தலமாகும்.

சிவ ஸ்தலமான காளஹஸ்தியில் ராகுவுக்கு சிறப்பான வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

கும்பகோணம் அருகே கீழப் பெரும்பள்ளம் கேது ஸ்தலமாகும்.

## நவகிரக தோஷம்

ஒருவருடைய ஜாதகத்தில் என்னதான் கிரக நிலைகள் சரியாக அமைந்திருந்தாலும்கூட, ஏதேனும் ஒரு கட்டத்தில் அவரும் சில கஷ்டங்களை சந்திக்கவே நேரிடுகிறது. கிரக நிலைகள் நல்லபடி இருப்பவர்களுக்கே இப்படியென்றால், கிரக தோஷம் உள்ள ஜாதக அமைப்பை பெற்றிருப்பவர்கள் பல நேரங்களில் பல விதமான கஷ்டங்களை

அனுபவிக்கவே நேரிடும். நவகிரக தோஷங்கள் ஏற்படவும் முற்பிறவியில் நாம் செய்த கர்மவினைகளே இதற்கும் காரணம் ஆகும்.

## நவகிரக தோஷங்களும் அதற்கான பரிகாரங்களும் :

### சூரிய தோஷம் உள்ளவர்கள் :

ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபெருமானுக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட்டால் சூரிய பகவானால் ஏற்பட்ட தோஷம் விலகும்.

### சந்திர தோஷம் உள்ளவர்கள் :

திங்கட்கிழமை அன்று அம்மனுக்கு பூஜை, அபிஷேகம் செய்து வழிபட்டால் சந்திரனால் ஏற்பட்ட தோஷம் விலகும்.

### செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் :

செவ்வாய்க்கிழமைகளில் அருகிலுள்ள முருகப்பெருமானுக்கு அபிஷேகமும், அர்ச்சனையும் செய்து வழிபட்டால், செவ்வாய் பகவானால் ஏற்பட்ட தோஷம் விலகும்.

### புதன் தோஷம் உள்ளவர்கள் :

புதன்கிழமையில் விஷ்ணு பகவான் அல்லது பெருமாள் ஆலயம் சென்று அர்ச்சனை செய்து வந்தால் போதும்.

### குரு தோஷம் உள்ளவர்கள் :

குரு பகவானால் ஏற்பட்ட தோஷம் விலகிட அருகிலுள்ள சிவாலயம் சென்று அங்குள்ள தட்சிணாமூர்த்தி அல்லது நவகிரகத்தில் உள்ள குரு பகவானுக்கு வியாழக்கிழமைகளில் அர்ச்சனை செய்ய வேண்டும்.

### சுக்கிர தோஷம் உள்ளவர்கள் :

சுக்கிர பகவானால் ஏற்பட்ட தோஷம் விலகிட லட்சுமி தேவியையும், பெருமாளையும் வெள்ளிக்கிழமைகளில் வணங்கி அர்ச்சனை செய்துவர, சுக்கிரனால் ஏற்பட்ட தோஷம் விலகும்.

### சனி தோஷம் உள்ளவர்கள் :

சனி பகவானால் தோஷம் உள்ளவர்கள் அருகிலுள்ள சனீஸ்வரர் ஆலயம் சென்று சனிக்கிழமைகளில் அர்ச்சனை செய்துவர தோஷம் விலகும்.

### ராகு-கேது தோஷம் உள்ளவர்கள் :

ராகு-கேது தோஷம் உள்ளவர்கள் ராகு காலத்தில் துர்க்கையம்மனை வணங்கி வர வேண்டும். அல்லது விநாயகப் பெருமானை திங்கட்கிழமை வணங்க வேண்டும்.

## நவகிரக பரிகார கோவில்கள் வழிபாடு :

### சூரியன் :

முதலில் நவகிரகங்களுக்கு அருள்புரிந்த திருமங்கலங்குடி ஸ்ரீபிராண நாதேஸ்வரரை வழிபட்டு பின்பு, சூரியனார் கோவிலுக்கு சென்று கருவறையில் உள்ள சூரிய சக்கரத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும். சூரியனை வழிபடுவதாலும், இங்குள்ள நவகிரகங்களை வழிபடுவதாலும் அனைத்து தோஷங்களும் நீங்கப் பெறுவர்.

### சந்திரன் :

தாய்க்கு பீடை நோய், மனநிலை பாதிப்பு, சந்திரன் ஜாதகத்தில் நீசம், மறைவு, பாவ கிரக சேர்க்கை உள்ளவர்கள் திங்களூர் கைலாசநாதர் கோவிலில் உள்ள சந்திரனை வழிபடுவதால் தோஷம் நிவர்த்தியாகும்.

### செவ்வாய் :

ஜாதகத்தில் செவ்வாய் பாதிப்பு, திருமணத்தடை, தொழில் சிக்கல், வீடு, மனை வாங்க, அடிக்கடி விபத்து போன்றவை ஏற்பட்டாலும் செவ்வாய் திசை நடைபெறும் காலங்களிலும் வைத்தீஸ்வரன் கோவிலில் தனி சன்னதியில் உள்ள செவ்வாய்க்கு தீபம் ஏற்றி தரிசனம் செய்ய எத்தகைய கடுமையான செவ்வாய் தோஷமும் நீங்கும்.

### புதன் :

குழந்தைகளுக்கு கல்வியில் ஆர்வமின்மை, தடங்கல்கள் ஏற்படும்போது திருவெண்காடு புதன் வழிபட்ட ஸ்ரீஸ்வேதாரண்யேஸ்வரரை தரிசித்த பின்பு, அங்கு எழுந்தருளியுள்ள புதனையும் வழிபட்டால் தோஷங்கள் நீங்கும்.

### குரு :

திருமணத்தடை, புத்திர தோஷம், குடும்ப ஒற்றுமை, நிம்மதி குறைவு, ஜாதகத்தில் குரு தோஷம் உள்ளவர்கள் வியாழக்கிழமை ஆலங்குடி குருபகவானை நெய் தீபம் ஏற்றி, வழிபடுவது சிறந்த பரிகாரமாகும்.

### சுக்கிரன் :

சுக்கிர தோஷம் உள்ளவர்கள் கஞ்சனூர் மூலவர் சுக்ரீஸ்வரரை சுக்கிர பகவானாக கருதி வழிபட்டால் தோஷம் நீங்கும். திருநாவலூர் பார்கவீஸ்வரரை வழிபட சுக்கிர தோஷம் நீங்கும்.

### சனி :

ஜாதகப்படி 7 1/2 சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி ஏற்படும் காலங்களில் திருநள்ளாறு நள தீர்த்தத்தில் நீராடி தர்ப்பாரண்யேஸ்வரரையும், போகமார்த்த அம்மனையும் வழிபட்ட பிறகு சனீஸ்வரர் சன்னதி சென்று எள் தீபம் ஏற்றி வழிபட தோஷம் நீங்கும். சனி பாதிப்புள்ளவர் திருவாதவூர் சனீஸ்வரனை சனிக்கிழமை அன்று வழிபட வேண்டும். சனி, ஈஸ்வரனை பிடிக்க முயன்று, கால் முடமாகி, கால் சரியாக ஈஸ்வரனை நோக்கி தவமிருந்த இடம் இது.

### ராகு :

ஆதிசேஷன் அவதாரமான ஸ்ரீமத் ராமானுஜர் எழுந்தருளியுள்ள ஸ்ரீபெரும்புதூர் சென்று நெய் தீபம் ஏற்றி, ஸ்ரீமத் ராமானுஜரையும், ஸ்ரீஆதிகேசவப் பெருமாள், ஸ்ரீதியாகராஜ நாதவல்லி தாயாரையும் திருவாதிரை நட்சத்திரம் வரும் நாளில் வழிபட நாக தோஷம் நீங்கும்.

### கேது :

பஞ்ச லிங்கங்களில் வாயு லிங்கம் உள்ள இடம். கண்ணப்பனுக்கு காட்சி தந்த ஸ்தலம் திருக்காளத்தி. இங்குள்ள காளத்தீஸ்வரருக்கு ருத்ராபிசேகம் செய்து அர்ச்சனை செய்ய கேதுவினால் ஏற்படும் தோஷம் நீங்கும்.

## சகட தோஷம்

ஒருவரது ஜாதகத்தில் ஆறாம் இடத்தில் சந்திரன் இருந்தாலும், குரு நின்ற ராசிக்கு ஆறு, எட்டு, பனிரெண்டு ஆகிய ராசிகளில் சந்திரன் இருந்தாலும் அந்த ஜாதகத்தை சகட தோஷ ஜாதகம் என்கிறோம்.

### சகட தோஷத்தினால் ஏற்படும் துன்பங்கள் :

சகட தோஷம் உள்ளவர்களுக்கு பணம் கையில் தங்காது மற்றும் வேலை கிடைக்க மிகவும் சிரமப்படுவார்கள். பதவி கிடைத்தாலும் பத்து நாட்களில் பறிப்போகும். தொட்ட காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்காது. மிகவும் போராட வேண்டி வரும்.

**சகட தோஷ பரிகாரங்கள் :**

காலை எழுந்தவுடன் 'ஓம் நமசிவாய நம' என்று 108 முறை வாழ்நாள் முழுவதும் சொல்லி வர வேண்டும்.

பச்சரிசி தவிடு மூன்றுபடி எடுத்து அதனை உங்கள் அருகில் உள்ள பசு மாட்டிற்கு ஒன்பது நாட்களுக்கு கொடுத்து அந்த பசுவை வணங்கி வந்தால் சகட தோஷம் விலகி வாழ்வில் வெற்றி கிடைக்கும்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் பங்குனி தேரோட்டத்தை கண்டால் சகட தோஷம் நீங்கி வாழ்வில் வளம் பெறுவர்.

இந்த தோஷம் உடையவர்கள் யானை முடி மோதிரம் அணியலாம்.

## பல்லி விழுந்தால் தோஷமா?

மனிதர்களுக்கு நல்லது, கெட்டதை எடுத்துக் கூறும் சக்தியும், தகுதியும் பல்லிக்கு உண்டு. பல்லி நம் மீது விழும் இடத்திற்கேற்ப தோஷங்கள் ஏற்படுவதாக சாஸ்திரங்கள் கூறுகிறது.

சில சமயங்களில் நம் மீது பல்லி விழுவதை அறிந்தால் அதற்கான பரிகாரங்களை செய்கிறோம். ஆனால் நமக்கே தெரியாமல் பல்லி நம்மீது விழுந்தால் ஏற்படும் தோஷத்தை எப்படி நிவர்த்தி செய்வது? என்று பார்ப்போம்.

**தங்க பல்லி, வெள்ளி பல்லி வழிபாடு :**

ஸ்ரீ ஸ்ருங்கி பேரர் என்னும் முனிவரின் இரு குமாரர்கள் கௌதம முனிவரிடம் சிஷ்யர்களாக இருந்தனர்.

அவர்கள் இருவரும் ஒரு நாள் பூஜைக்கு தீர்த்தம் கொண்டு வரச் சென்றனர். அவர்கள் கொண்டு வந்த தீர்த்தத்தில் பல்லிகள் இறந்து கிடந்ததை கண்ட முனிவர் பெரும் கோபம் அடைந்து இருவரையும் பல்லிகளாகும்படி சபித்துவிட்டாராம்.

பின்னர், சிஷ்யர்கள் மனம் வருந்தி வேண்டிக் கொண்டதால் காஞ்சி சென்றால் உங்களுக்கு மன்னிப்பு உண்டு எனக் கூறி மறைந்தார் முனிவர்.

பிறகு இருவரும் சப்தபுரிகளையும் சுற்றி வந்து விட்டு பெருமாளிடம் மோட்சம் கேட்டனர். அவர்களின் வேண்டுதலுக்கு செவி சாய்த்த வரதராஜ பெருமாள் உங்கள் ஆத்மா வைகுந்தம் செல்ல சரீரம் பஞ்ச உலோகத்தில் என் பின்புறம் இருக்க என்னைத் தரிசிக்க வருபவர்கள் உங்களைத் தரிசித்தால் சகல தோஷம் நீங்கி ஷேமம் உண்டாகும் என்று கூறி சூரியன், சந்திரன் இதற்கு சாட்சி என்று மோட்சம் அளித்தார்.

எனவே, காஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோவிலில் உள்ள தங்க பல்லி மற்றும் வெள்ளி பல்லியை தரிசித்தால் நம் மீது பல்லி விழுவதால் உண்டாகும் தோஷங்கள், கிரகண தோஷங்கள் விலகும்.

அதேபோல் பல்லியை கொல்வதால் ஏற்படும் தோஷத்திற்கும் இக்கோவிலில் உள்ள பல்லி உருவங்களை தொட்டு வணங்கினால் அந்த தோஷம் விலகும் என்பது ஐதீகம்.

## நட்சத்திர தோஷமும், பரிகாரங்களும்

### அஸ்வினி

முதற்பாகத்தில் பிறந்த குழந்தையின் தந்தைக்கு மூன்று மாதங்களுக்கு இன்னல்களும், பொருள் நஷ்டமும் உண்டாகும். அதற்கு சொர்ண தானமளிக்க வேண்டும்.

மற்ற மூன்று பாதங்களில் பிறந்தால் சிறிதளவு தோஷமுண்டு. இதற்கு வஸ்திர தானம் செய்திடல் வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கூத்தனூரில் எழுந்தருளியுள்ள கலைவாணியை வழிபட்டு வந்தால் எல்லா சிறப்புகளையும் பெறலாம்.

### பரணி

முதல் பாதம் தோஷமில்லை. இரண்டாவது பாதத்தில் பிறந்தால் தோஷமுண்டு. மூன்றாவது பாதம் மிகுந்த துன்பத்தை தரும்.

4வது பாதம் முதல் 8 நாழிகைக்குள் பிறந்தால் தாயாரின் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகும். இதற்கு சாந்தியாகத் துர்க்கை அல்லது காளிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்ய வேண்டும். பொன் அல்லது எருமை தானம் அளிக்கலாம்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் பட்டீஸ்வரம் சென்று துர்க்கையை வழிபட்டால் வளம் பெருகும்.

### கிருத்திகை

முதலிரண்டு பாதங்கள் தோஷமில்லை. மற்ற இரண்டு பாதங்களில் பிறந்தால் பெற்றோர்களுக்கு இன்னல்களும், இடையூறுகளும் உண்டாகும்.

இதற்கு ஆடு தானம் சிறந்தது. சூரிய ஆராதனையும், திருவண்ணாமலையில் உள்ள அக்னி லிங்க வழிபாடுகளும் மன அமைதியையும், பொருள் வளமையையும் தரும்.

### ரோகிணி

முதற்பாகம் அக்குழந்தைக்கும், தாய்மாமனுக்கும், இரண்டாம் பாதம் தந்தைக்கும், மூன்றாம் பாதம் தாயாருக்கும் தோஷம் விளைவிக்கும்.

நான்காம் பாதம் சாதாரணமானது எனினும் நான்கு பாதத்திற்கும் தோஷமுள்ளது. அத்துடன் தாய்மாமனுக்கும் கண்டம் என நூல்கள் விளக்குகின்றன.

எனவே அவரவர்களின் சக்திகேற்ப சாந்தி ஹோமங்கள் செய்வதுடன், வெள்ளியைத் தானமளிக்க வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் திருவருணை கோவிலில் பிரம்ம தீர்த்தம் எதிரில் உள்ள பிரம்ம லிங்கத்தை வழிபட்டு வந்தால் திரண்ட செல்வமும், நிறைந்த ஞானமும் பெறலாம்.

### மிருகசீரிடம்

நான்கு பாதங்களும் தோஷமில்லை. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பௌர்ணமி விரதமிருந்து சந்திரனை வழிபட்டால் சகல ஐஸ்வர்யங்களையும் பெறலாம்.

திங்களூர் சென்று வழிபட்டால் தீராத குறைகளெல்லாம் தீரும்.

### திருவாதிரை

முதல் மூன்று பாதங்கள் தோஷமற்றது. நான்காவது பாதத்தில் முதல் எட்டு நாழிகை வரையில் தாயாருக்கு கண்டம்.

இதற்கு பசு நெய் தானமளித்திடல் வேண்டும். செவ்வாய் அல்லது வியாழக்கிழமைகளில் பிறந்த திருவாதிரை நட்சத்திரத்தை சார்ந்தவர்கள் விஷ்ணு ஸகஸ்ர நாமம், ருத்ர ஜபம் செய்து வந்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

### புனர்பூசம்

நான்கு பாதங்களும் தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சூரிய ஆராதனை செய்வது சாலச்சிறந்தது.

திருவண்ணாமலையில் உள்ள சூரிய லிங்க ஆராதனை மிகவும் புகழையும், பொருளையும் வழங்கும்.

**பூசம்**

முதற்பாதம் தாய்மாமனுக்கும், 2வது பாதம் மத்திய (நடு) பாகம் மற்றும் மூன்றாம் பாதம் பெற்றோர்களுக்கும் துன்பம், நான்காம் பாதம் தோஷமற்றது.

இரண்டாம் பாதமும், கடக லக்னமும் கூடிய ஆண்குழந்தை தந்தைக்கு கண்டத்தை உண்டாகும். இரவு நேரங்களில் பிறந்த பெண்குழந்தையால் தாயாருக்கு கெடுதி.

இதற்கு பரிகாரமாக பசுவை தானம் செய்தல் வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தட்சிணா மூர்த்தியையோ, ஹயக்ரீவரையோ வழிபட்டு வருவது சிறந்ததாகும்.

**ஆயில்யம்**

முதற்பாகம் சாதாரணமானது. இரண்டாவது பாதம் அக்குழந்தைக்கும், தந்தைக்கும் தோஷம். மூன்றாவது பாதம் தாயாருக்கு கெடுதி.

நான்காம் பாதம் அக்குழந்தைக்கும், தந்தைக்கும் துன்பத்தை தரும். இதற்கு கிரக சாந்திகள், ஜபம், தானங்கள் அவசியம் செய்திடல் வேண்டும்.

நான்காம் பாதத்தில் பிறந்த குழந்தைக்கு ஆயுஷ் ஹோமம் செய்வதும், ஏழை எளியவர்களுக்கு வஸ்திரம் அன்னதானம் செய்வது மிகவும் அவசியம்.

இந்த நட்சத்திரத்தை சார்ந்தவர்கள் சர்பேஸ்வரனை வணங்குவது நல்ல பலன்களை தரும். ஸ்ரீகாளகஸ்தி மற்றும் திருநாகேஸ்வரம் சென்று வழிபாடு செய்வது சிறந்தது.

**மகம்**

முதல்பாகம், குழந்தையின் தந்தைக்கு தன நஷ்டத்தை, அக்குழந்தை பிறந்து முதல் ஐந்து மாதம் வரை உண்டாக்கும்.

ஈஸ்வரனுக்கு அபிஷேக ஆராதனைகள், கிரக சாந்திகள், தானங்கள் செய்திடலாம். இரண்டு மற்றும் நான்காவது பாதம் சிறிதளவு தோஷம் உள்ளது.

மூன்றாவது பாதத்தில் குழந்தை ஆண் என்றால் தந்தைக்கும், பெண் என்றால் தாயாருக்கும் தோஷத்தை உண்டாக்கும்.

இந்த நட்சத்திரத்தைச் சார்ந்தவர்கள் பித்ரு தேவதைகளை வழுவாது ஆராதனை செய்வது, திருக்கடையூர், ஸ்ரீவாஞ்சியம், திருமீச்சூர், திருப்பைஞ்சீலி ஆகிய திருத்தல வழிபாடுகளும் பெரும் நன்மையளிக்கும்.

### பூரம்

நான்கு பாதங்களும் சிறிதளவு தோஷமுள்ளது. இதற்கு பரிகாரமாக ருத்ராபிஷேகம் செய்வது மிகச் சிறந்தது.

இந்த நட்சத்திரத்தை சார்ந்தவர்கள் ஆதித்ய ஹருத்யம் நாள்தோறும் படிப்பது, சூரியனை வழிபடுவது நன்மையாகும்.

### உத்திரம்

முதற்பாகம், முதலிரண்டு நாழிகைக்குள் பிறந்த குழந்தை ஆண் என்றால் தந்தைக்கும், பெண் என்றால் தாயாருக்கும் தோஷம் உண்டாகும். இது இரண்டு மாதத்திற்குண்டு.

இரண்டு மற்றும் மூன்றாம் பாதம் சாதாரணமானது. நான்காம் பாதம் தந்தையின் சகோதரர்களுக்கு தோஷம் உண்டு பண்ணும், இதற்குப் பரிகாரமாக தைல (எண்ணெய்) தானம் செய்ய வேண்டும்.

இந்த நட்சத்திரத்தை சார்ந்தவர்களுக்கும் பனிரெண்டு ஆதித்யர்தனை சேர்ந்த 'ஆர்ய மன்' என்னும் சூரியனை வழிபடல் வேண்டும்.

### அஸ்தம்

ஒன்று, இரண்டு மற்றும் நான்காம் பாதம் தோஷமற்றது. மூன்றாம் பாதத்தில் முதல் நான்கு நாழிகைக்குள், ஆண் என்றால் தந்தைக்கும், பெண் என்றால் தாய்க்கும் தோஷமுண்டு. இது ஒன்பது மாதங்கள் நீடிக்கும்.

இத்தோஷத்தை ஸ்ரீவர்ணம் என்று கூறப்படும். பொன் தானத்தால் நீக்கிக்கொள்ள முடியும். ஆதித்ய ஹ்ருதயம் பாராயணமும், சூரிய வழிபாடும் மேற்கொள்ள எல்லா நன்மைகளும் விளையும்.

### சித்திரை

முதல் மூன்று பாதங்கள் தாயாருக்கு, தந்தைக்கு மற்றும் சகோதரர்களுக்கு தோஷம் உண்டாகும். இரண்டாவது பாதத்தில் முதல் ஆறு நாழிகைக்குள் என்றால் குழந்தையின் தாய்க்கு மிகவும் தோஷம்.

முதலிரண்டு பாதங்களுக்குரிய கன்னி ராசியில் பகலில் பிறக்கும் ஆண் குழந்தையால் தந்தைக்கும், பெண் குழந்தையால் தாயாருக்கும் தோஷம் உண்டாகும். இது பிறந்த ஆறுமாத காலத்திற்கு நீடிக்கும்.

நான்காம் பாதம் பிறந்த குழந்தை தந்தைக்கு துயரத்தை உண்டாக்கும். வஸ்திர தானம் ஏற்ற பரிகாரமாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இந்திரனை வழிபடல் வேண்டும்.

திருவண்ணாமலையில் கிழக்கு திசையில் உள்ள அஷ்ட லிங்கங்களில் முதல் லிங்கமான இந்திர லிங்க வழிபாடு செல்வம், செல்வாக்கு, பதவி உயர்வு தரும்.

### சுவாதி

நான்கு பாதங்களும் தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாயு தேவனை வணங்குதல் நன்று. அருணையிலுள்ள வாயுலிங்க வழிபாடு சாலச்சிறந்தது. திருமகளையும் வணங்குவது ஏற்றது.

### விசாகம்

நான்காம் பாதம் தோஷம். மற்ற பாதங்கள் தோஷமில்லை. நான்காம் பாதம் முதல் எட்டு நாழிகைக்குள் முதல் குழந்தையாக இருப்பின் தாயாருக்கு கண்டமென்றும் கூறப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை, சஷ்டி, கிருத்திகை போன்ற சுப்பிரமணி சாமிக்குரிய நாட்களில் செந்நிற ஆடை சாற்றி, சிவப்பு மலர் கொண்டு அபிஷேக, ஆராதனைகள் செய்வதும், துவரை மற்றும் கோதுமை தானிய தானங்கள் செய்வதும் சிறப்பான பலன்களை தரும்.

### அனுஷம்

தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மித்ர என்னும் துவாதச ஆதித்யர்களில் ஒருவரான சூரியனை வழிபடல் வேண்டும்.

வருணனையும், திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் வருணலிங்கத்தையும் வழிபடுவதும் மிகவும் சிறந்தது.

### கேட்டை

நான்கு பாதங்களும் தோஷத்தை தருவன. முதல் பாதத்தில் பிறந்தது ஆண் குழந்தையாயின் மூத்த சகோதரனுக்கும், பெண் என்றால் மூத்த சகோதரிக்கும், 2ஆம் பாதம் மற்ற சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், 3ஆம் பாதம் அக்குழந்தையின் தாய்க்கும், செல்வத்திற்கும், 4ஆம் பாதம் அக்குழந்தை மற்றும் அதன் தாயாருக்கும் கண்டமாகும்.

பசு அல்லது தங்கத்தால் செய்த பசுவினை தானமளிக்க வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் 'தேவேந்திரனை' வழிபடல் வேண்டும்.

இந்த நட்சத்திர பெண்கள் திருமணத் தடை நீங்க தூய வெண்மையான மலர் கொண்டு தேவேந்திரனை மனதில் தியானித்து வழிபாடு செய்தால் நல்ல கணவர் அமைவார். அருணையிலுள்ள இந்திரலிங்க பூஜையும் மிகவும் சிறந்த பலன்களை தரும்.

### மூலம்

முதல் பாதத்தில் ஆண்குழந்தை பிறந்தால் தந்தைக்கு துன்பம். பெண் குழந்தையாயின் கால்நடைகள் (பசுக்கள்) நஷ்டமாகும்.

2-ஆம் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் அதன் தாய்க்கு துன்பம். 3-ஆம் பாதம் ஆண் குழந்தையால் பொருள் நஷ்டம், சகோதரர்களுக்கு துன்பங்களும் ஏற்படும்.

3-ஆம் பாதம் பெண் குழந்தையினால் தந்தையின் வம்சத்திற்கே நஷ்டம். 3-ஆம் பாதம் பகலில் பிறந்தால், அதன் தந்தைக்கும், மாலைப்பொழுதில் பிறந்தால் அக்குழந்தையின் தாய் மாமனுக்கும், இரவில் பிறந்தால் தாய்க்கும், உதயவேளை அல்லது காலை எனில் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு தீங்காகும்.

எப்பாதத்தில் பிறந்திருப்பினும், ருத்ராபிஷேகம் செய்திடல் வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் பிரஜாபதியை வழிபட்டால் வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெறுவார்கள்.

### பூராடம்

1, 2 மற்றும் 4-ஆம் பாதங்களில் பிறந்தால் சிறிதளவு தோஷம் உண்டு. மூன்றாம் பாதத்தில் பிறந்த குழந்தை ஆண் என்றால் தந்தைக்கும், பெண் என்றால் தாய்க்கும் தோஷமாகும்.

இத்தோஷம் எட்டாம் மாதம் வரையில் இருக்கும். தனுசு ராசியில் உள்ள இந்த நட்சத்திரத்தில் சூரிய உதய வேளையிலும், அஸ்தமிக்கும் வேளையிலும், நடு இரவிலும் புத்ர ஜனனமானது அதன் தந்தைக்கும் மற்றும் அச்சிசுவிற்கும் பெரும் தோஷமாகும்.

நவகிரகம் மற்றும் நட்சத்திர ஹோமம் செய்வதும், புனித கங்கை நீரினால் சிவபெருமானுக்கு அபிஷேகமும் செய்ய வேண்டும் இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர்.

திருவானைக்காவல் இறைவனையும், திருவண்ணாமலையில் உள்ள வருண லிங்கத்தையும் வழிபட்டால் நல்ல செல்வமும், செல்வாக்கும் பெறலாம். பௌர்ணமி விரதம் ஏற்றது. தேங்காய், நெய் தீப வழிபாடு சாலச்சிறந்தது.

### உத்திராடம்

நான்கு பாதங்களும் தோஷமில்லை எனினும், செவ்வாய்க்கிழமை உத்திராட நட்சத்திரத்தில் பெண் குழந்தை பிறந்தால் 'விஷ கன்னியா' யோகம் உண்டாகும்.

அப்பெண் திருமணமாகி, கணவன் வீடு செல்லும் வரையில் பிறந்த வீட்டில் இன்னல்கள், இடையூறுகள் உண்டாகும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் விஸ்வ தேவதைகளையும், விநாயகரையும் வழிபட்டால் வாழ்க்கையில் வளமும், பலமும் பெறலாம்.

பாண்டிச்சேரி மணக்குள விநாயகர், திருப்பாதிரிப்புலியூர் பாதிரி விநாயகர், திருவண்ணாமலை ஆநிறை கணபதி ஆகியோரின் வழிபாடு சிறப்பை தரும்.

### திருவோணம்

தோஷமில்லை. இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் ஏகாதசி விரதம் இருந்து, திருமாலை வழிபட்டால் பொன்னும், பொருளும் கிடைக்கும்.

சிரவண விரதம் மேற்கொண்டு திருவேங்கடமுடையானை ஆராதித்து, லஷ்மி குபேர திருவுருவ படத்தை - குபேர யந்திரம் - மந்திரம் கொண்டு பூஜித்து, திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள குபேரலிங்கத்திற்கு அபிஷேக ஆராதனைகள் செய்தால் பெரும் பொருளும், புகழும் பெறுவார்கள்.

இவர்களுக்கு வாகன யோகம் உண்டாகும்.

### அவிட்டம்

தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அஷ்டவஸுக்களை ஆராதிக்க வேண்டும். பித்ரு முக்தி ஸ்தலங்களில் இராமேஸ்வரம், காசி, கயை, லால்குடி அருகிலுள்ள பூவளூர் ஆகிய ஊர்களில் உள்ள இறை மூர்த்திகளை ஆராதனை செய்வதும் மிகுந்த நன்மை தரும்.

### சதயம்

தோஷமில்லாதது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர் திருவானைக்காவல் இறைவனையோ, திருமீச்சூரில் எழுந்தருளியுள்ள ஶ்ரீமேக நாதரையோ, திருவணையில் உள்ள வருண லிங்கத்தையோ வழிபட்டால் இன்னல்கள் எல்லாம் நீங்கி இன்பமுறுவர்.

### பூரட்டாதி

முதல் மூன்று பாதங்கள் சிறிதளவே தோஷமுள்ளது. நான்காவது பாதத்தில் முதல் எட்டு நாளிகைக்குள் பிறந்தால் சிசுவின் தாய்க்கும் கண்டம். அதுவும் முதல் குழந்தை எனில் தோஷம் அதிகம். பொன் தானம் கொடுக்க வேண்டும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் செல்வத்தில் சிறந்தோங்க லஷ்மி குபேர பூஜையை மேற்கொள்ள வேண்டும்.

திருவண்ணாமலையில் கிரிவல பாதையிலுள்ள குபேரலிங்கத்தையும், சீர்காழி அருகிலுள்ள ஸ்ரீலஷ்மி புரீஸ்வரரையும் வழிபடுவது சாலச் சிறந்தது.

### உத்திரட்டாதி

தோஷமற்றது. இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் காமதேமனுவை பூஜித்தாலும், பட்டீஸ்வரத்திலுள்ள தேனுபுரீஸ்வரரை வழிபட்டாலும் நல்லவை எல்லாம் இடையூறு இன்றி வெற்றியுடன் நடைபெறும்.

### ரேவதி

முதல் மூன்று பாதத்தில் பிறந்தால் சிறிதளவு தோஷம் உண்டாகும். நான்காம் பாதத்தில் பிறந்தால் குழந்தையின் தந்தைக்கும் தோஷமுண்டு. மூன்று மாதம் இருக்கும். இத்தோஷம் விலக பொன்னாலான பசு உருவம் மற்றும் பசும் நெய் தானமளிக்க வேண்டும்.

பன்னிரண்டு ஆதியர்களின் ஒருவரான 'பூஷர்' என்பவரையோ, சூரியனார் கோவிலில் எழுந்தருளியுள்ள சூரிய நாராயணமூர்த்தியையோ அல்லது திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள சூரிய லிங்கத்தையோ வழிபட்டாலும் நல்ல உடல் ஆரோக்கியம் பெற்று சிறந்த முறையில் புகழுடன் வாழலாம்.

## தார தோஷம்

ஒருவருடைய ஜாதகத்தில் 7-ம் இடம் துணைவிக்கான ஸ்தானம் ஆகும். இந்த இடங்களில் பாவ கிரகங்கள் அமர்ந்திருந்தாலோ, சுக்கிரனை பாவ கிரகங்கள் பார்த்து கொண்டிருந்தாலோ அந்த ஜாதகம் தார தோஷம் கொண்ட ஜாதகமாகும்.

ஏழாம் பாவகம் பலம் குன்றி பதினொன்றாம் பாவகம் பலம் பெற்று இருந்தால் அது தார தோஷத்தையே குறிப்பிடுகின்றது. இந்த தார தோஷமானது நாம் முற்பகுதியில் செய்த கர்ம வினைகளை கொண்டே ஏற்படுகிறது.

### தார தோஷம் என்ன செய்யும்?

தார தோஷம் உள்ள ஜாதகக்காரர்களுக்கு திருமண தாமதம் ஏற்படும்.

திருமணமானவர்களுக்கு தங்களின் துணையிடம் தேவையில்லாமல் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

திருமணமான சில நாட்களிலே விவாகரத்து ஏற்படுதல் போன்ற பிரச்சனைகள் உண்டாகும்.

**பரிகாரம் :**

**வாழை மரத்திற்கு தாலி கட்டுதல் :**

வாழைக்கு தெய்வ குணமும், பெண்ணின் குணமும் உள்ளது. அதனால்தான் வாழைக்கு தாலி கட்டினால் தார தோஷம் நீங்கிவிடும் என்று ஜோதிட சாஸ்திரங்கள் கூறுகின்றன. வாழையை பெண்ணாக எண்ணி, வாழைக்கு தாலி கட்டினால் ஒரு மனித பெண்ணை திருமணம் செய்யும்போது அதில் மண முறிவு ஏற்படாமல் தவிர்க்கலாம். ஒரு சிலருக்கு ஜாதகத்தில் இரண்டு திருமணம் இருக்கும். இவர்களுக்கு இதுபோன்று செய்வது சிறந்த பலனை தரும்.

இரு தார தோஷம் உள்ளவர்கள் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு அமாவாசை அன்றும் ஆஞ்சநேயரை வணங்கி வந்தால் தோஷ பாதிப்பு குறையும்.

**செல்ல வேண்டிய கோவில்கள் :**

தார தோஷம் நீங்க புதுக்கோட்டை மூலங்குடியில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலுக்கு சென்று பிரார்த்தனை செய்யலாம்.

திருநெல்வேலி செங்கோட்டையை அடுத்துள்ள புளியறை எனும் கிராமத்தில் அமைந்துள்ளது சிவகாமி அம்பாள் சமேத சதாசிவமூர்த்தி கோவிலுக்கு கிரக தோஷமுள்ளவர்கள் வியாழக்கிழமைதோறும் இங்கு வந்து தரிசித்தால் நல்ல பலன் கிடைக்கும். தாலி பாக்கியம் கிட்டும். தார தோஷம் நிவர்த்தியாகும்.

ஜாதகத்தில் எந்தவிதத்தில் இருதார தோஷம் பெற்றிருந்தாலும் அவர்கள் இந்த சேர்த்தி சேவையில் ஸ்ரீ ரங்க நாயகி ஸமேத ரங்கநாதரை தரிசித்தால் தோஷம் நிவர்த்தியாகும்.

திருப்பைஞ்சலி சென்று முறையான வழிபாடுகள் செய்வதன் மூலம் தோஷத்தை நிவர்த்தி செய்ய முடியும்.

## புனர்பூ தோஷம்

திருமணத்திற்கு ஜாதகம் பார்க்கும்போது முக்கியமாக கவனிக்கப்படும் தோஷங்களில் ஒன்று புனர்பூ தோஷம் ஆகும். ஜாதகத்தில் சனியும், சந்திரனும் ஒன்றாக சேர்ந்து இருந்தால் அல்லது சனியின் பார்வையில் சந்திரன் இருப்பது அல்லது இருவரும் ஒரு அதிபதி நட்சத்திரத்தில் பயணிப்பதால் அந்த ஜாதகம் புனர்பூ தோஷ ஜாதகம் ஆகும்.

**புனர்பூ தோஷத்தால் ஏற்படும் பிரச்சனைகள் :**

புனர்பூ தோஷ ஜாதகக்காரர்களுக்கு திருமணத்தில் தாமதம் ஏற்படும்.

இரு வீட்டிலும் திருமண பேச்சுவார்த்தை நல்லபடியாக நடக்கும்போது திடீரென நின்றுவிடும்.

நிச்சயக்கப்பட்ட திருமணம் தள்ளிப்போவது.

திருமணத்திற்கு போகும் வழியில் ஏதேனும் பிரச்சனைகள் உருவாகி கால தாமதமாதல்.

திருமணத்திற்கு பிறகு தம்பதியர் எவரேனும் ஒருவருக்கு தீராத நோய் ஏற்படுதல்.

திருமணம் முடிந்த தம்பதியினர் தனித்தனியே பிரிந்து செல்லுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும்.

**புனர்பூ தோஷ பரிகாரங்கள் :**

இந்த ஜாதக அமைப்பு கொண்டவர்கள் திருமணஞ்சேரி சென்று முறையாக பரிகாரம் செய்தால் இந்த தோஷத்திலிருந்து விடுபடலாம்.

குலதெய்வ கோவிலுக்கு அடிக்கடி சென்று வரலாம். முடி காணிக்கை செலுத்துவது நல்லது.

தொடர்ச்சியாக மூன்று பௌர்ணமி தினங்களில் விரதம் இருந்து திருவண்ணாமலை கிரிவலம் சென்று, மும்மூன்று முறையாக ஒன்பது துறவிகளுக்கு வஸ்திர தானம் செய்து வந்தால் திருமண தடை நீங்கி உடனடியாக நல்ல வரன் அமையும்.

**புனர்பூ தோஷ பாதிப்பை குறைக்கும் துதிப்பாடல் :**

சனி காயத்ரி மந்திரம்

காகத் வஜாய வித்மஹே

கட்க ஹஸ்தாய தீமஹி

தந்நோ மந்தஹ ப்ரசோதயாத்

சனி ஸ்துதி

நீலாஞ்சன சமா பாசம்

ரவிபுத்ரம் யமாக்ஞ்ரஜம்

சாய மார்த்தாண்ட தம் பூதம்

தம் நமாமி சனைஸ்வரம்

**இந்த பாடலை தினமும் 27 முறை சொல்லி வந்தால் புனர்பூ தோஷ பாதிப்பு குறைந்து திருமணத் தடையை நீக்கும்.**

## பரிகார ஸ்தலங்கள் சில...

## இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில்

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோவில் தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகும். சம்பந்தர், அப்பர் ஆகியோரின் பாடல் பெற்ற இத்தலம் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில், ராமேஸ்வரத்தில் அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள 12 ஜோதிர்லிங்க தலங்களுள் ஒன்றாக கருதப்படுகிறது.

**தல வரலாறு :**

இராமாயண போரில் இராவணனை கொன்ற பிறகு சீதையை சிறைமீட்டு இராமபிரான் அழைத்து வருகிறார். இராமேஸ்வரம் தலம் வந்தபிறகு, இராவணனை கொன்றதால் ஏற்பட்ட தோஷம் விலக சிவபெருமானை வழிபட தீர்மானித்து, அனுமனை சிவலிங்கம் கொண்டு வருமாறு காசிக்கு அனுப்புகிறார்.

சிவலிங்க பிரதிஷ்டைக்கு குறிப்பிட்டிருந்த நேரத்திற்குள் அனுமன் திரும்பி வராததால் சீதை கடற்கரையில் உள்ள மணலால் ஒரு சிவலிங்கம் உருவாக்கி தந்தாள். இராமபிரான் அந்த சிவலிங்கத்தை குறித்த நேரத்தில் பிரதிஷ்டை செய்து தனது பூஜையை முடித்தார். காலங்கடந்து வந்த அனுமன் தான் வருவதற்குள் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதை கண்டு கோபமுற்று தனது வாலினால் இராமபிரான் பிரதிஷ்டை செய்த லிங்கத்தை பெயர்த்து எடுக்க முயன்று தோல்வியுற்று நின்றார்.

இராமர் அனுமனை சமாதானப்படுத்தி அனுமன் கொண்டுவந்த லிங்கத்தை முதலில் பிரதிஷ்டை செய்த லிங்கத்திற்கு அருகில் பிரதிஷ்டை செய்தார். மேலும் அனுமன் கொண்டுவந்த லிங்கத்திற்கே முதற்பூஜை நடைபெற வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.

அனுமன் கொண்டு வந்த சிவலிங்கம் இராமலிங்கத்திற்கு வடபுறம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அனுமன் கொண்டுவந்த லிங்கம் காசி விசுவநாதர் எனப்படும். இன்றும் இந்த காசி விசுவநாதருக்கே முதல் பூஜை நடைபெறுகிறது. பின்பே இராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்கத்திற்கு பூஜை நடைபெறுகிறது.

### கோவில் அமைப்பு :

இராமேஸ்வரம் திருக்கோவில் சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஒரு பெரிய கோவிலாகும். இராமேஸ்வரம் கோவிலின் கிழக்கு கோபுரமே மிகவும் உயரமானது. இதன் உயரம் சுமார் 126 அடி. மேற்கில் உள்ள கோபுரம் சுமார் 78 அடி உயரம் உடையது.

இக்கோவிலின் நான்கு பக்கமும் வாயில்கள் அமைந்திருந்தாலும் வடக்கு, தெற்கு வாயில்கள் உபயோகத்தில் இல்லை. ஆலயத்தினுள் இராமலிங்கம், காசி விஸ்வநாதர் பர்வதவர்த்தினி, விசாலாட்சி, நடராஜர் ஆகிய இவருக்கும் தனித்தனியே விமானங்கள் அமைந்திருக்கின்றன. சுவாமியின் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இச்சன்னதியில் சீதாதேவியால் உருவாக்கப்பட்டு இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்கர் சிவலிங்க திருமேனியுடன் காட்சி அளிக்கிறார்.

### கோவில் தீர்த்தம் :

இராமேஸ்வரம் கோவிலில் சுவாமி தரிசனத்தை விட தீர்த்தமாடுவது தான் மிக சிறப்பாக கருதப்படுகிறது. ஆலயத்தின் உள்ளே 22 தீர்த்தங்களும் வெளியே 22 தீர்த்தங்களும் உள்ளன. ஆலயத்தின் உள்ளே உள்ள தீர்த்தங்கள் எல்லாம் கிணறுகளாகவே அமைந்துள்ளன. அக்னி தீர்த்தம் என்று கூறப்படும் இராமேஸ்வரம் சமுத்திரக் கரையில் முதலில் தீர்த்தமாடுதலை தொடங்கி பின்பு ஆலயத்தினுள் மற்ற தீர்த்தங்களில் நீராட வேண்டும்.

முற்காலத்தில் தனுஷ்கோடியில் நீராடி அதன் பின்பு, ராமேஸ்வரம் வந்து தீர்த்தமாடும் வழக்கம் இருந்தது. தனுஷ்கோடி பல வருடங்களுக்கு முன்பு புயலில் அழிந்த பிறகு, கோவில் முன்புள்ள அக்னி தீர்த்தக்கடலில் நீராடும் வழக்கம் ஏற்பட்டது. அக்னி தீர்த்தம் என்று கூறப்படும் சமுத்திரக் கரையில் தான் முன்னோர்களுக்கு தர்ப்பணங்கள், பிதிர்கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன.

### பரிகாரம் :

பிதுர் காரியங்களை செய்வதற்கு ராமேஸ்வரம் ராமநாதர் கோவில் சிறந்த தலமாக விளங்குகிறது.

## திருமண தடை நீங்கும் திருமணஞ்சேரி

திருமணஞ்சேரி என்னும் திருத்தலம் திருமண தடையை நீக்க வல்லது. திருமண தடையால் கலங்கி தவிக்கும் ஆண்களும், பெண்களும் இங்கே மாப்பிள்ளை கோலத்தில், மாப்பிள்ளை ஸ்வாமியாக காட்சி தரும் உற்சவரை கண்ணார தரிசித்தல் சிறப்பு.

திருமணஞ்சேரி என்னும் ஊர் மயிலாடுதுறை அருகே உள்ள குத்தாலத்தில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையில் இருந்து நிறைய பேருந்துகள் இயக்கப்படுகிறது.

**திருத்தல வரலாறு :**

இந்த திருத்தலத்தில் பார்வதி அம்மன் கைலாயத்தில் சிவபெருமானை வேண்டி, மறுபடியும் சிவனை மணம் முடிக்க வேண்டும் என்றும் வேண்டினாள். சிவனும் அவ்வாறே வாக்களித்தார். உமாதேவி மகிழ்ச்சியுற்று இருந்தாள். அப்போது பார்வதி சிறிது பிழை செய்தார். அதனை கண்டு கோபம் கொண்ட சிவன், பார்வதி தேவிக்கு பசுவாக மாறும்படி சாபம் அளித்தார். துன்பத்தில் இருந்த பார்வதி தேவி சாப விமோசனம் பெறுவதற்கும், தன்னை மணந்து கொள்ளவும் சிவனை வணங்கினாள். ஆனால் சிவனோ நேரம் வரும்போது கூறுவதாக கூறினார்.

பசு உருவம் பார்வதி தேவி மட்டும் கொள்ளவில்லை. அவருடன் சேர்ந்து லட்சுமி, சரஸ்வதி ஆகியோரும் பசு வடிவம் பெற்று இருந்தனர். மாடு மேய்க்கும் தொழிலை விஷ்ணு கொண்டிருந்தார். அப்போது அம்பிகை தனது பாலை சிவபெருமானுக்கு பொழிந்து சிவனை குளிர செய்து சாப விமோசனம் நீங்கி தனது உண்மையான வடிவத்தை பெற்று திருமணம் பூண்டார்.

அப்போது பாரத மகரிஷி என்னும் முனிவர் சிவனை வேண்டி யாகம் நடத்தினார். அவர் நடத்திய யாகத்தின் முன் ஈசனுக்கும், அம்பிகைக்கும் திருமணம் நடந்தது. ஆதலால் இங்கு திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.

**கோவிலின் சிறப்பு :**

இந்த கோவிலில் திருமணம் ஆகாதவர்கள் வந்து அர்ச்சனை செய்தால் விவாகம் இனிதே நிறைவேறும் என்பது அக்காலத்தில் இருந்து நடைபெற்று வரும் நம்பிக்கை. மேலும், இந்த கோவிலின் மிக சிறப்புகளில் ஒன்றாக கருதப்படுவது தோஷ நிவர்த்திகள். ஜாதகத்தில் ஏதேனும் ராகு தோஷம் இருந்தால் அவர்கள் இங்குள்ள ராகு பகவானுக்கு அபிஷேகம் செய்ய ராகு தோஷம் நீங்கும். மேலும் புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் கூட இந்த தலத்தில் வந்து திருக்குளத்தில் நீராடி ராகு பகவானை மனதார வழிபட விரையில் புத்திர பாக்கியம் கிட்டும்.

இக்கோவிலில் உள்ள ராகு பகவானுக்கு பால் என்றால் மிகவும் பிடித்த ஒன்றாகும். ஆகவே, ராகு பகவானுக்கு பால், பொங்கல் பிரசாதமாக செய்து அதனை உண்டு வர புத்திர பாக்கியம் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு.

**திருமணம் ஆக செய்ய வேண்டியவை :**

திருமணமாக, கோவிலில் உள்ள சப்தகிரி தீர்த்தத்தில் முதலில் குளித்துவிட்டு, பிறகு மூலவராக உள்ள கல்யாண சுந்தரருக்கு மாலை சாற்ற வேண்டும். பிறகு அர்ச்சனை செய்து அங்குள்ள தீபம் வைக்கப்படும் மேடையில் ஐந்து தீபம் ஏற்ற வேண்டும். பிறகு அங்கு திருமண மேடையில் வழங்கப்படும் எலுமிச்சம் பழத்தை உப்பு, சர்க்கரை சேர்க்காமல் தண்ணீரில் கலந்து குடிக்க வேண்டும். பிரசாதமாக வழங்கப்படும் மாலையை பத்திரப்படுத்தி வீட்டிற்கு சென்றதும்

அதனை ஒரு முறை போட்டு இறைவனை மனதார வணங்க வேண்டும். பிறகு கோவிலில் கொடுக்கப்படும் பிரசாதமான விபூதி மற்றும் குங்குமத்தை தினமும் பயன்படுத்த வேண்டும்.

மேலும் இந்த பத்திரப்படுத்தப்பட்ட மாலையானது திருமணமான உடனே இருவரும் வந்து கோவிலில் இட்டு அர்ச்சனை செய்து வேண்டுதலை முடிக்க வேண்டும்.

**கோவிலின் தோற்றம் :**

இந்த கோவிலானது ஐந்து கோபுரங்களை கொண்டது. இந்த கோவிலில் கணபதி, முருகன், லட்சுமி, துர்க்கை, நந்தியம்பெருமான் ஆகியோர் காட்சி அளிக்கின்றனர். இந்த கோவிலில் தான் மன்மதன் கண் திறக்கும் காட்சி உள்ளது. உற்சவர் மூர்த்தி பிரகாரங்களில் உள்ளார். மேலும் சிவபெருமானின் கழுத்திற்கு மாலையாக வந்து திருமணத்தை நடத்தி வைத்த ஏழு சமுத்திரங்களும் ஒரே தீர்த்தக்குளத்தில் உள்ளது.

## குச்சனூர் சனீஸ்வரன் கோவில்

நவகிரகங்களில் ஒன்றாகவும், சில வழிபாட்டு தலங்களில் துணைக் கோவிலாகவும் கொண்டு எழுந்தருளியிருக்கும் சனீஸ்வர பகவான் தமிழகத்தில் தனக்கென தனிக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஒரே இடம் தேனி மாவட்டத்தில் உள்ள குச்சனூரில்தான்.

**தல வரலாறு :**

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் சுரபிநதி எனப் புராணங்களில் போற்றப்படும் பெருமையுடைய சுருளி ஆற்றின் கிளையாக இருக்கும் முதன்மை வாய்க்காலின் மேற்கு கரையில் இந்த குச்சனூர் சனீஸ்வர பகவான் கோவில் அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டில் சனீஸ்வரன் சுயம்புவாக இங்கு மட்டுமே உள்ளார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் இப்பகுதி குலிங்க நாடு என்று அழைக்கப்பட்டது. இங்குள்ள மணி நகரத்தை தலைநகரமாக கொண்டு தினகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். மன்னனுக்கு வாரிசு இல்லை. இவரது கனவில் தேவலோக ரம்பையும், ஊர்வசியும் வந்து, ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்குமாறு அறிவுறுத்தினர்.

அதன்பேரில் ஒரு அந்தணரின் குழந்தையை எடுத்து சந்திரவதனன் என்று பெயரிட்டு வளர்த்தார். இதற்கிடையே கர்ப்பம் தரித்த ராணி வெந்துருவை, ஆண் குழந்தையை பெற்றெடுத்தால், அந்தக் குழந்தைக்கு சுதாகன் என்று பெயரிட்டு வளர்த்தனர்.

மன்னன் தினகரனுக்கு ஏழரை சனி பிடித்தது. பட்டம் சூட்டும் நிலையில் வளர்ப்பு மகன் சந்திரவதனன் அடர்ந்த செண்பக வனத்திற்குள் சென்று தியானம் செய்தார். மனமிறங்கிய சனீஸ்வரன் தியானத்தை பற்றி கேட்டபோது, வயதான காலத்தில் தந்தையால் தாங்கிக்கொள்ள முடியாது என்னை பிடித்து ஆட்டுங்கள் என்று மன்றாடினான். மனமிரங்கிய சனீஸ்வர பகவான் பிடிக்கும் காலத்தை ஏழரை மாதமாக குறைத்து மறைந்தார்.

மீண்டும் தொடர்ந்து தியானித்தபோது, மீண்டும் சனீஸ்வர பகவான் தோன்றி, தினகரனை பிடிக்கும் காலத்தை ஏழரை நாழிகையாக குறைத்ததோடு, சுயம்புவாக தோன்றி அப்பகுதியில் கோவில் கட்டவும் உத்தரவிட்டார்.

அதன்பேரில் இப்பகுதியில் குச்சுப்புற்களால் கோவில் கட்டி வழிபாடு செய்யப்பட்டது. அதனால், இது குச்சனூர் என்று அழைக்கப்பட்டது.

### வழிபாடுகளும், சிறப்புகளும் :

இந்த குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோவிலில் தினசரி வழிபாடு நடத்தப்பட்டு வந்தாலும் சனிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் வரும் சனிக்கிழமைகளில் 'ஆடிப் பெருந்திருவிழா' என்கிற பெயரில் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இதுபோல் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் சனிப்பெயர்ச்சியின்போதும் 'சனிப்பெயர்ச்சி திருவிழா' சிறப்பாக நடத்தப்படுகிறது.

சுயம்புவாக இருக்கும் இந்த சனீஸ்வர பகவான் கோவிலில் 'விடத்தை மரம்' தல மரமாகவும், 'கருங்குவளை மலர்' தல மலராகவும், 'வன்னி இலை' தல இலையாகவும் உள்ளது.

இந்த கோவிலில் துணை தெய்வங்களாக அருள்மிகு சோணைக் கருப்பண சுவாமி, அருள்மிகு லாட சன்னியாசி ஆகியோர் இருக்கின்றனர்.

சனி தோஷம் உடையவர்கள் இந்தக் கோவிலிற்கு வந்து மனமுருக வேண்டிக் கொண்டால் அவர்களுக்கு வரும் சோதனைகள் நீங்கி வாழ்க்கையில் வளம் பெற முடியும்.

மேலும் தாங்கள் தொடங்கும் புதிய தொழில் வளர்ச்சி அடையவும், வணிகம் பெருகவும், குடும்பத்தினர் நலமுடன் வாழவும் இவரது துணை வேண்டுமென்று தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் இந்த கோவிலுக்கு வந்து வணங்கி செல்கின்றனர்.

## நாகநாதசுவாமி கோவில், திருநாகேஸ்வரம்

திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோவில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் பாடப்பெற்ற சிவாலயமாகும். இதனால் பாடல் பெற்ற தலம் என்ற சிறப்பு பெற்றுள்ளது. தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்தலங்களில் 29வது சிவத்தலமாகும். தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் இருந்து தென்கிழக்கில் காரைக்கால் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது திருநாகேஸ்வரம் தலம்.

மூலவர் : நாகநாதர்

அம்மன்/தாயார் : பிறையணி வானுதலாள்

தல விருட்சம் : செண்பகம்

மாவட்டம் : தஞ்சாவூர்

**தல வரலாறு :**

சிவன் மீது சிறந்த பக்தி கொண்ட கிரகமாகிய ராகு பகவான், ராமேஸ்வரம் மற்றும் காளஹஸ்தி ஆகிய இடங்களில் மேன்மை பெற்று விளங்கிய போதிலும் இத்தலத்தில் ராகுபகவான் தனது மனைவிகளான சிம்ஹி, சித்ரலேகாவுடன் (நாகவல்லி, நாககன்னி) மங்கள ராகுவாக தம்மை வழிபடுவோருக்கு பல நலன்களையும், அருளையும் தருவது சிறப்பு.

சுசீல முனிவரால், ராகு பகவானுக்கு ஏற்பட்ட சாபம் நீங்க இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டார். எனவே, இத்தலத்தில் உள்ள இறைவன் 'நாகநாதர்' எனப் பெயர் பெற்றார். அன்று முதல் இது ராகு தோஷ நிவர்த்தி தலமாக விளங்குகிறது.

சிவனின் அருள் நாகத்திற்கு கிடைத்த தலம் என்பதால், நவகிரகங்களில் ஒருவரான ராகு, இத்தலத்தில் சிவனை வழிபட தன் தேவியருடன் வந்தவர். சிவனின் தரிசனம் தினமும் பெற வேண்டி தன் மனைவியருடன் இங்கேயே தங்கிவிட்டார்.

பொதுவாக ராகு மனித தலை, நாக உடலுடன்தான் காட்சி தருவார். ஆனால், இக்கோவிலில் மனித வடிவில் காட்சி தருகிறார். ராகுவை, இந்த கோலத்தில் காண்பது அபூர்வம்.

**தல சிறப்பு :**

இது சேக்கிழாரின் அபிமான தலம் மற்றும் சேக்கிழாரால் திருப்பணி செய்யப்பட்ட தலம் ஆகும். ராகு பகவான் சுசீல முனிவரால் ஏற்பட்ட சாப விமோட்சனம் பெறுவதற்காக மகாசிவராத்திரி அன்று நாகநாத சுவாமியை வழிபட்ட தலம் ஆகும்.

இத்திருக்கோவிலில் ராகு பகவான் மங்கள ராகுவாக நாகவல்லி, நாககன்னி ஆகியோருடன் சமேதராய் காட்சி அளிக்கிறார். ராகு பகவானின் திருமேனியில் அபிஷேகம் செய்யப்படும் பால் நீல நிறமாக மாறுகிறது. ராகுவினால் ஏற்படக்கூடிய தோஷங்கள் அகல ராகுவுக்கு பாலாபிஷேகம் செய்கின்றனர்.

இத்தலத்தில் இறைவி கிரிகுஜாம்பாள், லட்சுமி, சரஸ்வதி ஆகியோருடன் அருள்பாலிக்கிறார். அம்பாளுக்கு புனுகு மட்டுமே சாத்தப்படும். நவகிரக தலத்தில் இது ராகு தலமாகும். ராகு தோஷ பரிகாரத்திற்காக மக்கள் இங்கு அதிகம் வந்து வழிபடுகின்றனர்.

1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் ராகு பகவானின் மீது ஐந்தரை அடி நீளமுள்ள நாகமானது தனது சட்டையை மாலையாக இராகு பகவானுக்கு அணிவித்து இவரது பெருமையை உலகிற்கு உணர்த்தியது. இது இறைவனை தரிசிக்க வரும் பக்தர்கள் பார்வைக்கு காட்சி பொருளாக கண்ணாடி பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

### திருவிழா :

மகாசிவராத்திரி, மார்கழி திருவாதிரை, பங்குனி உத்திரம், திருக்கார்த்திகை, கார்த்திகையில் பிரமோற்சவம், ராகு பெயர்ச்சி, ஞாயிறு தோறும் மாலை 4.30 முதல் 6 மணி வரை ராகு காலத்தில் ராகு பகவான் சிறப்பு பூஜை, பாலாபிஷேகம் நடைபெறும்.

### ராகு கேது தோஷம் நீங்க :

ராகு கேது தோஷம் உள்ளவர்கள் இத்தலத்தில் வழிபட்டால் தோஷம் நீங்கும்.

ராகு காலத்தில் ராகு பகவானுக்கு பாலாபிஷேகம் செய்து விளக்கு ஏற்றி வழிபட வேண்டும்.

கோவிலில் உள்ள வன்னி மரத்தில் மஞ்சள் கயிறு கட்டி வழிபட்டால் திருமண தோஷம் விலகும்.

வீட்டிற்கு நாகம் வந்தால் அவர்கள் பித்தளையில் நாக வடிவினை செய்து கோவிலில் வைக்க வேண்டும்.

நாகதோஷம் உள்ளவர்கள் கல்லால் ஆன நாக வடிவை வைத்து தோஷம் நீங்க வழிபாடு செய்ய வேண்டும்.

## பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில்

தமிழகத்தின் சிறந்த பரிகார தலங்களில் பவானியும் ஒன்றாகும். பிறப்பு முதல் இறப்பு வரையிலுள்ள அனைத்து தோஷங்களுக்கும் இங்கு பரிகாரம் செய்யப்படுகிறது.

பவானி, காவேரி மற்றும் கண்ணுக்கு புலப்படாத அமிர்த நதி என்ற மூன்று நதிகளும் கூடும் இடமான திரிவேணி சங்கமம் என்று அழைக்கப்படும் கூடுதுறையில் பவானி சங்கமேஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ளது.

இந்த கோவிலில் சங்கமேஸ்வரர், வேதநாயகி சன்னதிகள் மற்றுமன்றி ஆதிகேசவப் பெருமாளுக்கும், சௌந்திரவல்லி தாயாருக்கும் சன்னதிகள் அமைந்து சைவ, வைணவ ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்கட்டாக அமைந்துள்ளது.

### தல வரலாறு :

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆண்டு வந்த காலத்தில் வில்லியம் காரோ என்பவர்தான் பவானி பகுதிக்கு கலெக்டராக இருந்தார். அம்பிகை வேதநாயகியின் பெருமையையும், அழகையும் மக்கள் வியந்து பேசுவதை கண்ட காரோ தாமும் அம்பிகையை காண விரும்பினார்.

இந்துக்கள் மட்டுமே கோவிலுக்குள் செல்லலாம் என்பதால், மதில் சுவரில் சாளரம் போன்று மூன்று துளைகளை செய்து காரோ அதன்மூலம் அம்பிகையை காண வழி செய்தார். காரோவும் அம்பிகையை அச்சாளரத்தின் மூலம் தினந்தோறும் கண்டு வழிபட்டு வந்தார். அந்த துளைகள் இன்றும் உள்ளன.

ஒருமுறை காரோ தனது இல்லத்தின் மாடியில் உறங்கிக் கொண்டிருந்தபோது அம்பிகை வேதநாயகியை போன்று வடிவுடைய பெண் ஒருத்தி அவரை தட்டி எழுப்பி கையை பற்றி விரைவாக வெளியே அழைத்து சென்றது போன்ற உணர்வு ஏற்பட்டு திடுக்கிட்டு விழித்து எழுந்த காரோ பரபரப்புடன் மாடியிலிருந்து கீழே ஓடினார்.

அடுத்த நிமிடமே காரோ குடியிருந்த இல்லத்து மாடி இடிந்து கீழே விழுந்தது. தான் பிழைத்தது அம்பிகையின் அருள் என்று போற்றி, அம்பிகைக்கு தந்தத்தால் ஆன கட்டில் செய்து காணிக்கையாக அம்பிகைக்கு அளித்தார். அதில் தனது கையொப்பமும் இட்டார்.

### கோவிலின் அமைப்பு :

பவானியும், காவிரியும் கூடும் இடத்தில் வடகரையில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் இந்த கோவில் அமைந்துள்ளது.

கோவிலுக்கு இரண்டு வாயில்கள். கோவிலின் பிரதான கோபுரம் வடக்கு திசையில் 5 நிலைகளையும் 7 கலசங்களையும் உடையதாக அமைந்துள்ளது.

இக்கோவிலின் தென்மேற்கு மூலையில் உள்ள தல விருட்சம் இலந்தை மரம் தனி சிறப்பு கொண்டது. வேதமே மரவடிவெடுத்து வந்திருப்பதாக ஐதீகம். இங்கு தான் குபேரனுக்கு சிவபெருமான் சுயம்பு மூர்த்தியாக தரிசனம் தந்துள்ளார்.

### கோவிலின் சிறப்பு :

வேதநாயகியின் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இந்த சன்னதியின் வலப்பக்கம் சுப்பிரமணியர் சன்னதி அமைந்துள்ளது. சுப்பிரமணியர் சன்னதியைக் கடந்து சென்றால் இந்தக் கோவிலின் மூலவரான சங்கமேஸ்வரர் கோவில் உள்ளது.

இக்கோவிலில் உள்ள அமிர்தலிங்கேஸ்வரர் சன்னதி சிறப்புடையதாகும்.

## திருநள்ளாறு சனீஸ்வரன் கோவில்

திருநள்ளாறு என்றாலே நம் நினைவுக்கு வருவது சனி பகவான் தான். சனியைப் போல கொடுப்பவரும் இல்லை, சனியைப் போல கெடுப்பவரும் இல்லை என்பர். அவ்வளவு சக்தி கொண்ட சனி பகவானின் மிகவும் பிரசித்தி பெற்ற, புகழ் வாய்ந்த சனீஸ்வரன் கோவில் அமைந்துள்ள இடம் தான் திருநள்ளாறு.

மூலவர் : தர்ப்பாரண்யேஸ்வரர், திருநள்ளாற்றீஸ்வரர்.

தாயார் : பிராணேஸ்வரி, பிராணாம்பிகை, போகமார்த்த பூண்முலையாள்.

ஊர் : திருநள்ளாறு.

**தல வரலாறு :**

திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் கோவில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகும். தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரை தலங்களில் 52வது சிவ தலமாகும். இத்தலத்தில் சனீஸ்வரன் இறைவனை வணங்கி பேறு பெற்றார். அதனால் இத்தலத்தில் உள்ள சனீஸ்வரன் புகழ்பெற்று விளங்குகிறார். இத்தல சனீஸ்வரரை வணங்கினால் ஏழரை சனி உள்ளிட்ட பல சனிகளின் பிரச்சனைகள் தீரும். நளதீர்த்ததில் நீராடி சனீஸ்வரரை தரிசனம் செய்து, இறைவன் தர்ப்பாரண்யேஸ்வரரை வழிபட்டு பேறு பெறுகின்றனர்.

திருநள்ளாறு கோவிலுக்கு ஒரு காலத்தில் ஆதிபுரி என்பது பெயராகும். அங்குள்ள சிவனை வழிபட்டு பிரம்மா பரிகாரம் பெற்றதாக தல புராண வரலாறு சொல்கிறது. பிரம்மதேவர் பூஜித்த சிவனுக்கு தர்ப்பாரண்யேஸ்வரர் என்பது பெயராகும். இங்குள்ள தல விருட்சம் தர்ப்பை ஆகும்.

திருநள்ளாற்றிற்கு மிக சுவாரஸ்யமான வரலாறு உண்டு. பச்சைப் படிகம் என்ற கீர்த்தனைகள் மூலம் திருநள்ளாறு குறித்த வரலாற்றை தெரிந்து கொள்ள முடிகிறது. சைவ, சமய பாரம்பரியம் கொண்ட இவ்வூர் மக்கள், ஜெயினர்களின் வருகையால் அவர்களின் சமயத்தின்பால் ஈர்க்கப்பட்டனர்.

அந்த நகரத்தை ஆண்ட ராஜாவோ இத்தகைய மாற்றத்தை விரும்பவில்லை. மாறாக, அந்த நகரத்தின் பாரம்பரிய சமயமான, சைவ சமயத்தை நிறுவ விருப்பம் கொண்டிருந்தார்.

அப்போது, சைவ துறவியான திருஞானசம்பந்தரின் சிறப்புக்களை பற்றி கேள்விப்பட்ட அரசர், அவருக்கு அழைப்பு விடுத்தார். அதன் பேரில் அரசரின் அழைப்பை ஏற்று இங்கு வந்த திருஞானசம்பந்தர், அரசருக்கு நீண்ட காலமாக இருந்த உடல் கஷ்டங்களை தன் விசேஷ சக்திகளை கொண்டு குணமாக்கினார்.

இது அந்நகரம் முழுக்க பரவ ஆரம்பித்தது. அதுமட்டுமல்லாமல் திருஞானசம்பந்தர், மக்களின் துன்பங்களையும் நீக்கி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். திருஞானசம்பந்தரின் புகழ் நகரம் முழுவதும் பரவியது.

திருஞானசம்பந்தரின்பால் ஈர்க்கப்பட்டு, மக்கள் சைவ சமயத்தை தழுவ ஆரம்பித்தனர். இதனை கண்ட ஜெயின் சமயத்தினர், சம்பந்தரை போட்டிக்கு அழைத்தனர். அதில் வெற்றி பெற்ற சம்பந்தர், அங்கு மறுபடியும் சைவ சாம்ராஜ்யத்தை நிறுவ பெரும் பணியாற்றினார். இதன் தொடர்ச்சியாக, எழுந்தது தான் திருநள்ளாறு கோவில்.

**தலச்சிறப்பு :**

சனி பார்வையில் உள்ள பக்தர்கள் இத்தலத்திற்கு சென்று எள்ளுடன் கூடிய தீபம் ஏற்றி அன்னதானம் செய்தால் சனிபகவான் அருள் பரிபூரணமாக கிட்டும். இத்தலத்தில் பூஜைசெய்து மேன்மை பெற்ற நள மன்னரால் திருநள்ளாறு என்ற பெயரைக் கொண்டு சிறப்புடன் விளங்குகிறது. இது தோஷ நிவர்த்தி தரும் பரிகார தலமாகும்.

திரு+நள+ஆறு என்பது திருநள்ளாறு என்று ஆனது. இதில் 'நள' எனும் சொல் நளச் சக்ரவர்த்தியை குறிக்கிறது. அவர் இக்கோவிலில் வந்து வழிபட்டு, சனி தோஷத்தை நிவர்த்தி செய்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

இதன் காரணமாக நள சக்ரவர்த்தியின் துயரை ஆற்றிய ஊர் என்பதால் திருநள்ளாறு என பெயர் பெற்றது. பாண்டிச்சேரியில், காரைக்கால் அருகே அமைந்துள்ள திருநள்ளாறு, நவகிரக தலங்களில் ஒன்றாகும்.

## நவகிரக பரிகார கோவில்கள் வழிபாடு

**சூரியன் :**

முதலில் நவகிரகங்களுக்கு அருள்புரிந்த திருமங்கலங்குடி ஸ்ரீ பிராண நாதேஸ்வரரை வழிபட்டு பின்பு, சூரியனார் கோவிலுக்கு சென்று கருவறையில் உள்ள சூரிய சக்கரத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும். சூரியனை வழிபடுவதாலும் இங்குள்ள நவகிரகங்களை வழிபடுவதாலும் அனைத்து தோஷங்களும் நீங்க பெறுவர்.

**சந்திரன் :**

தாய்க்கு பீடை நோய், மன நிலை பாதிப்பு, சந்திரன் ஜாதகத்தில் நீசம், மறைவு, பாவ கிரக சேர்க்கை உள்ளவர்கள் திங்களூர் கைலாசநாதர் கோவிலில் உள்ள சந்திரனை வழிபடுவதால் தோஷம் நிவர்த்தியாகும்.

**செவ்வாய் :**

ஜாதகத்தில் செவ்வாய் பாதிப்பு, திருமணத்தடை, தொழில் சிக்கல், வீடு, மனை வாங்க, அடிக்கடி விபத்து போன்றவை ஏற்பட்டாலும், செவ்வாய் திசை நடைபெறும் காலங்களிலும் வைத்தீஸ்வரன் கோவிலில் தனி சன்னதியில் உள்ள செவ்வாய்க்கு தீபம் ஏற்றி தரிசனம் செய்ய எத்தகைய கடுமையான செவ்வாய் தோஷமும் நீங்கும்.

**புதன் :**

குழந்தைகளுக்கு கல்வியில் ஆர்வமின்மை, தடங்கல்கள் ஏற்படும்போது திருவெண்காடு புதன் வழிபட்ட ஸ்ரீ வேதா ரண்யேஸ்வரரையும் தரிசித்து பின்பு, அங்கு எழுந்தருளியுள்ள புதனையும் வழிபட்டால் தோஷங்கள் நீங்கும்.

**குரு :**

திருமணத்தடை, புத்திர தோஷம், குடும்ப ஒற்றுமை, நிம்மதி குறைவு, ஜாதகத்தில் குரு தோஷம் உள்ளவர் வியாழக்கிழமை அன்று ஆலங்குடி குரு பகவானுக்கு நெய் தீபம் ஏற்றி வழிபடுவது சிறந்த பரிகாரமாகும்.

**சுக்கிரன் :**

சுக்கிர தோஷம் உள்ளவர் கஞ்சனூர் மூலவர் சுக்ரீஸ்வரரை சுக்கிர பகவானாக கருதி வழிபட்டால் தோஷம் நீங்கும். திருநாவலூர் பார்கவீஸ்வரரை வழிபட சுக்கிர தோஷம் நீங்கும்.

**சனி :**

ஜாதகப்படி 7 1/2 சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம் சனி ஏற்படும் காலங்களில் திருநள்ளாறு நள தீர்த்தத்தில் நீராடி தர்ப்பாரண்யேஸ்வரரையும், போக மார்த்த அம்மனையும் வழிபட்ட பிறகு சனீஸ்வரர் சன்னதி சென்று எள் தீபம் ஏற்றி வழிபட தோஷம் நீங்கும்.

சனி பாதிப்புள்ளவர் திருவாதவூர் சனீஸ்வரனை சனிக்கிழமை வழிபட வேண்டும். சனி, ஈஸ்வரனைப் பிடிக்க முயன்று, கால் முடமாகி, கால் சரியாக ஈஸ்வரனை நோக்கி தவமிருந்த இடம் இது.

**ராகு :**

ஆதிசேஷன் அவதாரமான ஸ்ரீ மத் ராமானுஜர் எழுந்தருளியுள்ள ஸ்ரீபெரும்புதூர் சென்று நெய் தீபம் ஏற்றி, ஸ்ரீமத் ராமானுஜரையும், ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் ஸ்ரீ தியாகராஜ நாதவல்லி தாயாரையும் திருவாதிரை நட்சத்திரம் வரும் நாளில் வழிபட நாகதோஷம் நீங்கும்.

**கேது :**

பஞ்ச லிங்கங்களில் வாயு லிங்கம் உள்ள இடம். கண்ணப்பனுக்கு காட்சி தந்த தலம் திருக்காளத்தி. இங்குள்ள காளத்தீஸ்வரருக்கு ருத்ராபிசேகம் செய்து அர்ச்சனை செய்ய கேதுவினால் ஏற்படும் தோஷம் நீங்கும்.

## குறைகளை போக்கும் ரங்கநாதர்

பல்லாயிரக்கணக்கான பெருமாள் கோவில்களில் உலக புகழ்பெற்ற ஸ்ரீரங்கநாதர்சுவாமி கோவில் திருச்சியில் அமைந்துள்ளது.

**கோவில் பிறந்த கதை :**

திருவரங்கம் கோவில் விமானம் பிரம்மாவின் தவத்தால் திருப்பாற்கடலில் இருந்து வெளிப்பட்டு தோன்றியதாகும் (இதை சுயம்பு என்று கூறுவர்). பிரம்மா, நித்திய பூஜை செய்ய சூரியனை நியமித்தார். பிறகு சூரிய குலத்தில் பிறந்த அரசன் இஷ்வாகு இந்த விமானத்தை தனது தலைநகரமாகிய அயோத்திக்கு வழிபட கொண்டு சென்றான்.

ராமர் இவ்விமானத்தை இலங்கையிலிருந்து தனது பட்டாபிஷேகத்துக்கு வந்த விபீஷணனுக்கு பரிசாக கொடுத்தார். இதனை விபீஷணன் தனது தலையின் மீது சுமந்து இலங்கைக்கு எடுத்து செல்கையில் வழியில் காவிரியாற்றின் கரையை அடைந்தான். விமானத்தை கீழே இறக்கி வைத்துவிட்டு சிறிது நேரம் இளைப்பாறினான். பின்னர் அவன் மீண்டும் புறப்பட நினைத்து விமானத்தை எடுத்தான். எடுக்க முடியவில்லை, எவ்வளவோ முயன்று பார்த்தான். எடுக்க முடியாமல் கலங்கினான். அங்கு ஆண்டுவந்த தர்மவர்ம சோழன் ஆறுதல் கூறினான்.

அரங்கநாதரும் காவிரிக்கரையிலேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவித்தார். விபீஷணனுக்காக, தான் 'தென்திசை இலங்கை நோக்கி' பள்ளிகொண்டடு அருள்வதாக உறுதியளித்தார். பின்னர் தர்மவர்ம சோழன் அவ்விமானத்தை சுற்றி கோவில் எழுப்பி வழிபாடு செய்தான்.

**தலச்சிறப்பு :**

108 வைணவ திவ்ய தேசங்களில் முதன்மையானதாக கருதப்படும் இத்தலம் பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படுகிறது. லட்சுமி தேவி தினமும் வந்து பூஜிக்கும் தலமாகும்.

மதுரகவி ஆழ்வாரை தவிர மற்ற 11 ஆழ்வார்களால் 247 பாசுரங்களால் ஸ்ரீரங்கனை போற்றி மங்களாசாசனம் செய்த தலமாகும். கவிசக்கரவர்த்தி கம்பர், இராமாயணத்தை இத்தலத்தில் தான் அரங்கேற்றினார் (தாயார் சன்னதிக்கு அருகில்).

**கம்பீர காட்சி :**

ஆசியாவிலேயே மிக உயரமான கோபுரம் என்ற பெருமைக்குரியது ஸ்ரீரங்கம் ராஜகோபுரமாகும். இதன் உயரம் 236 அடி. 13 நிலைகளுடன், 13 கலசங்களுடன் கம்பீரமாய் காட்சியளிக்கிறது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் நாயக்க மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்டு முற்றுப்பெறாது இருந்த தெற்கு ராஜகோபுரம் முன்பு மொட்டை கோபுரமாக இருந்தது. வருடத்திற்கு ஒருமுறைதான் பெருமாளும், தாயாரும் பங்குனி உத்திர தினத்தன்று தாயார் சன்னதியில் உள்ள சேர்த்தி சேவை மண்டபத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளிக்கின்றனர்.

**சிற்பங்களின் அழகு :**

கட்டிடக்கலைக்கு பறைசாற்றக்கூடிய அளவில் கோவிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபமும், அதில் உள்ள திருமாமணி மண்டபமும், ஷேசராய மண்டபமும் உள்ளது. சேஷராயர் மண்டபத்தில் உள்ள நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய கற்சிற்பங்களின் அழகு நம் நாட்டினவரை மட்டுமல்ல வெளிநாட்டவரையும் ஆச்சரியப்பட வைக்கும் வகையில் அமைய பெற்றுள்ளது.

**தன்வந்திரி சன்னதி :**

தேவர்களும், அசுரர்களும், திருப்பாற்கடலில் அமுதம் கடைந்தபோது விஷத்தால் பாதிக்கப்பட்ட தேவர்களை காக்க தன்வந்திரி பெருமாள் அவதாரம் எடுத்து காத்தார். இத்திருக்கோவிலில் உயர்ந்த இடத்தில் கிழக்கு நோக்கி தன்வந்திரி சன்னதி உள்ளது. வைணவ திருத்தலங்களில் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே தன்வந்திரிக்கு தனி சன்னதி உள்ளது. கடும் நோயுற்றவர்கள் இந்த சன்னதியில் அர்ச்சனை செய்து வழிபட்டால் உடம்பில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் நீங்கும். நோயுற்றவர்கள் இந்த சன்னதியில் தன்வந்திரி பெருமாளிடம் வேண்டி, அர்ச்சனை, திருமஞ்சனம் செய்து நோய் நீங்கி வளம் பெற்று வருகிறார்கள்.

**பரிகாரம் :**

ஒருவரின் ஜாதகத்தில் களத்திர தோஷம் இருந்தால் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் சேர்த்தி சேவையை தரிசித்தால் களத்திர தோஷம் நீங்கும். கணவன், மனைவி இடையே சண்டை இருந்தால் சேர்த்தி சேவை பார்த்து சேர்ந்து வாழலாம்.

நாக தோஷம் மற்றும் களத்திர தோஷம் உடையவர்கள் கருட வாகனத்தில் வலம் வரும் பெருமாளை தரிசிப்பதால், அனைத்துவிதமான தோஷங்களும் நீங்கி சகல செல்வங்களும் பெறுவார்கள். கருட சேவையை தரிசிக்க சென்றால் பெருமாள் ஆசியுடன், நம் முன்னோர்களின் ஆசியும் கிடைக்கும்.

## அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில், திருச்செங்கோடு

திருச்செங்கோட்டு மலை : திருச்செங்கோடு என்பதற்கு 'அழகிய இறைத்தன்மை பொருந்திய செந்நிற மலை என்றும், செங்குத்தான மலை' என்றும் பொருள். மலையின் பெயரே ஊருக்கு அமைந்துவிட்டது.

இந்த மலை உருவானதற்கு ஒரு புராணக்கதை உண்டு. ஆதிசேஷனுக்கும், வாயு பகவானுக்கும் தங்களில் யார் பெரியவர்? என்ற போட்டி ஏற்பட்டது. இதற்காக ஒரு பந்தயம் கட்டப்பட்டது. ஆதிசேஷன் தன் படங்களால் மேரு மலையை அழுத்தி பிடித்து கொள்ள வேண்டும். வாயு பகவான் தன் பலத்தால் மலையை விடுவிக்க வேண்டும் என்பதே பந்தயம்.

இதன்படி வாயு வேகமாக வீச, மலையின் முகட்டுப்பகுதிகள் பறந்து சென்று பூமியின் பல இடங்களிலும் விழுந்தன. அதில் ஒன்றே திருச்செங்கோட்டு மலை. ஆதிசேஷ பாம்பு மலையை பிடித்தபோது, ஏற்பட்ட காயத்தில் இருந்து ரத்தம் கொட்டி, மலை செந்நிறமானதாலும் இப்பெயர் வந்ததாக சொல்வர். இம்மலைக்கு நாககிரி, வாயுமலை என்னும் பெயர்களும் உண்டு.

### திருத்தலக் குறிப்பு :

தல இறைவன் : அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர், அருள்மிகு செங்கோட்டு வேலவர், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள்

தல விருட்சம் : இலுப்பை மரம்

தல தீர்த்தம் : தேவ தீர்த்தம், கணபதி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இந்திர தீர்த்தம், சிவ தீர்த்தம், குமார தீர்த்தம், பாவநாச தீர்த்தம், தீன்ம தீர்த்தம், வைரவ தீர்த்தம், வாண தீர்த்தம், சண்முக தீர்த்தம், வாயு தீர்த்தம், அக்னி தீர்த்தம், சப்தகன்னியர் தீர்த்தம், நாக தீர்த்தம்.

### சிறப்பம்சங்கள் :

ஒரே உருவத்தில் இடது பக்கம் பெண்ணுருவாகவும், வலது பக்கம் ஆணின் உருவமாகவும் உமையொரு பாகனாய், ஈருடல் ஓருயிர் என்னும் சொல்லிற்கு உண்மையிலேயே சரியானதொரு வடிவத்தை இங்கு காண முடியும். வலது கையில் தண்டாயுதம் தாங்கிய வண்ணம் வீற்றிருக்கிறார் அம்மையப்பன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் சிறப்புடன் அமையப்பெற்ற திருத்தலம். சிவனும் சக்தியும், அம்மையும் அப்பனும் இணைந்து கலந்த நிலையில், அம்மையப்பன் எனும் தோற்றத்தில் இறைவன் எழுந்தருளி உள்ளது உலகிலேயே இத்தலத்தில் மட்டும்தான். இதுவே இத்திருக்கோவிலின் பெருஞ்சிறப்பு. தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருப்புகழ், கந்தர்

அனுபூதி, கந்தர் அலங்காரம் என பல்வேறு தெய்வீக நூல்களில் இத்திருக்கோவில் போற்றி பாடப்பட்டுள்ளது.

அர்த்தநாரீஸ்வரர், செங்கோட்டுவேலன், ஆதிகேசவ பெருமாள் என மூன்று தெய்வங்களுக்கும் தனித்தனி சன்னதிகள், ஒவ்வொரு தெய்வங்களுக்கும் தனித்தனி பரிவார தெய்வங்கள் என மூன்று தனித்தனி கோவில் அமைப்புடன், ஒரே திருக்கோவிலாய் அமையப்பெற்ற திருத்தலம். ஒற்றுமையின் சின்னமாய் திகழ்கிறது இத்திருத்தல அமைப்பு.

**நாக சிலை :**

மலையின் அடியில் 60 அடி நீளம் கொண்ட 5 தலை நாகத்தின் புடைப்பு சிற்பம் உள்ளது. இது ஆதிசேஷன் மலை என்றும் அழைக்கப்படும். சதய நட்சத்திரத்தன்று, இக்கோவிலுக்கு சென்று ஆதிசேஷனை வழிபட்ட பின் அர்த்தநாரீஸ்வரரை வணங்குவது சிறப்பு. சுவாமிக்கு பால் அபிஷேகம் செய்து தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

நாகதோஷம், ராகுதோஷம், காளசர்ப்ப தோஷம், களத்திர தோஷத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து வழிபாடு செய்தால் பலன் கிடைக்கும்.

**ஒற்றுமை விரதம் :**

திருவண்ணாமலை போலவே இம்மலையை பௌர்ணமி நாளில் வலம் வந்தால் கயிலாயத்தையும், வைகுண்டத்தையும் வலம் வந்த பலன் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமையுடன் வாழ, இக்கோவிலில் கேதார கவுரி விரதம், புரட்டாசி வளர்பிறை அஷ்டமி திதியில் ஆரம்பித்து 21 நாள்கள் கடைபிடிக்கப்படுகிறது.

## அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோவில்

திருக்கொள்ளிக்காடு அக்னீஸ்வரர் கோவில் அப்பர் மற்றும் சம்பந்தரால் தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென்கரை தலங்களில் உள்ள 115வது சிவ தலமாகும்.

இச்சிவாலயம் திருவாரூர் மாவட்டத்திலுள்ள திருத்துறைப்பூண்டி வட்டத்தில் திருக்கொள்ளிக்காடு எனும் ஊரில் அமைந்துள்ளது.

மூலவர் : அக்னீஸ்வரர்
தாயார் : பஞ்சின் மெல்லடியம்மை, மிருதுபாத நாயகி
தீர்த்தம் : அக்னி தீர்த்தம், தீர்த்த குளம்
புராணப்பெயர் : கீராளத்தூர்
ஊர் : திருக்கொள்ளிக்காடு
மாவட்டம் : திருவாரூர்

**தல வரலாறு :**

சனிபகவான் பாரபட்சம் பார்க்காதவர். நாம் செய்யும் தவறுகளுக்கு தகுந்தபடி தண்டனை கொடுப்பவர். அதேபோல் ஒருவர் பிறந்த நேரத்தின்படி சனிபகவான் நன்மை செய்வதாக அமைந்திருந்தால் அவர்களுக்கு அளவற்ற நன்மைகளையும், சிறந்த முன்னேற்றத்தையும் அளிப்பார்.

ஆனால், தேவர் முதல் மனிதர் வரை சனிபகவான் செய்யும் நன்மைகளை கண்டு சந்தோஷப்படாமல், அவர் செய்யும் தீய பலன்களை பற்றி மட்டுமே நினைத்து பயப்படுவர்.

இதனால் மனம் வருந்திய சனிபகவான், வசிஷ்டரின் யோசனைப்படி அக்னி வனம் எனப்படும் இத்தலத்தில் வந்து கடும் தவம் செய்தார். இவரது தவத்தில் மகிழ்ந்த ஈசன், அக்னி உருவில் தரிசனம் தந்து, சனியை பொங்கு சனியாக மாற்றினார்.

அத்துடன் இத்தலம் வந்து தன்னையும், பொங்கு சனியையும் வழிபடுவோருக்கு சனி சம்பந்தப்பட்ட தோஷங்கள் விலகும் என அருள்புரிந்தார்.

**தலப்பெருமை :**

அக்னி பகவான் தன் சாபம் நீங்க இத்தலத்து ஈசனை வணங்கியதால் இறைவன் 'அக்னீஸ்வரர்' எனப்படுகிறார். இங்கு மகாலட்சுமியின் சன்னதிக்கு அருகில் சனிபகவான் சன்னதி அமைந்திருப்பது தலத்தின் சிறப்பாகும்.

இத்தலத்திற்கு வன்னி, ஊமத்தை, கொன்றை என 3 தல விருட்சங்கள் உள்ளன. இதில் வன்னிமரம் குபேர செல்வத்தையும், ஊமத்தை மனக்கவலை நீங்க, கொன்றை குடும்ப ஒற்றுமையையும் தருகிறது.

நாம் செய்யக்கூடிய பாவங்கள் அனைத்தையும் இத்தல இறைவன் அழித்து விடுவதால், பாவங்களுக்கு தண்டனை அழிக்கும் வேலை, இத்தலத்து நவகிரகங்களுக்கு கிடையாது.

கலப்பை ஏந்திய சனிபகவான் உழைப்பின் பெருமையை உணர்த்தும் வகையில் கலப்பை ஏந்திய நிலையில் அருள்பாலிக்கிறார். இவரை சனிக்கிழமைகளில் மட்டுமின்றி அனைத்து கிழமைகளிலும் வன்னி இலைகளால் அர்ச்சனை செய்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

நவகிரக மண்டலத்தில் சனியின் திசை மேற்கு. அதேபோல் இத்தலமும் மேற்கு பார்த்து அமைந்துள்ளது. சனி சம்பந்தப்பட்ட தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து அக்னீஸ்வரரை வழிபாடு செய்து, சனிபகவானை வழிபட்டால் தோஷம் விலகும் என்பது ஐதீகம்.

**தலச்சிறப்பு :**

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார். பொதுவாக அனைத்து கோவில்களிலும் நவகிரகங்கள் ஒன்றையொன்று பார்க்காமல் அமைந்திருக்கும். ஆனால் இத்தலத்தில் 'ப' வடிவில் அமைந்திருப்பது சிறப்பு.

இத்தல முருகன் கையில் வில்லுடன் அருளுகிறார். இங்குள்ள சனிபகவான் உழைப்பின் பெருமையை உணர்த்தும் வகையில் கலப்பை ஏந்திய நிலையில் அருள்பாலிக்கிறார்.

**பிரார்த்தனை :**

சனி சம்பந்தப்பட்ட தோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து அக்னீஸ்வரரை வழிபாடு செய்து, சனிபகவானை வழிபட்டால் தோஷம் விலகும் என்பது ஐதீகம்.

**நேர்த்திக்கடன் :**

வேண்டுதல் நிறைவேறியவர்கள் சுவாமிக்கு அபிஷேகம் செய்து, புது வஸ்திரம் சாற்றி வழிபடுகின்றனர்.

## அருள்மிகு விருத்தபுரீஸ்வரர் திருக்கோவில்

மூலவர் : விருத்தபுரீஸ்வரர் (பழம்பதிநாதர்).

தல விருட்சம் : புன்னை, சதுரகள்ளி, மகிழம், குருந்த மரம்.

பழமை : 1000-2000 வருடங்களுக்கு முன்பு.

ஊர் : திருப்புனவாசல்.

மாவட்டம் : புதுக்கோட்டை.

**தல வரலாறு :**

பிரம்மா படைக்கும் தொழிலை, ஓம் என்ற பிரணவ மந்திரத்திற்கு பொருள் தெரியாமல், செய்த தவறுக்காக இழக்க வேண்டியதாயிற்று. பார்வதியின் அறிவுரைப்படி, பூலோகத்தில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து, மீண்டும் தனது தொழிலை பெற பூஜை செய்து வந்தார்.

லிங்க அபிஷேகத்திற்காக தீர்த்தம் ஒன்றை உருவாக்கினார். பிரம்மன் உருவாக்கிய தீர்த்தம் என்பதால் பிரம்ம தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டது. நான்கு முகங்களை கொண்டவர்

என்பதால், லிங்கத்தின் நான்கு பகுதிகளிலும் சிவமுகத்தை உருவாக்கினார். இது சதுர்முக லிங்கம் எனப்பட்டது.

சதுர் என்றால் நான்கு என்று பொருள். இந்த லிங்கமே இங்கு வழிபாட்டில் இருந்தது. பிற்காலத்தில், இரண்டாம் சுந்தர பாண்டியன், சோழநாட்டு பாணியையும், பாண்டியநாட்டு பாணியையும் கலந்து ஒரு கோவிலை எழுப்பினான்.

சோழர் கோவில்களில், ராஜகோபுரம் சிறிதாகவும், விமானம் உயரமாகவும் இருக்கும். பாண்டியர் கோவில்களில் இதற்கு நேர்மாறாக இருக்கும். இது கலப்பட கோவில் என்பதால், ராஜகோபுரமும், விமானமும் மிக உயரமாக அமைக்கப்பட்டது.

மூலஸ்தானத்தில் பிரம்மாண்டமான ஆவுடையாருடன் கூடிய லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவரை விருத்தபுரீஸ்வரர் என அழைத்தனர். விருத்தம் என்றால் பழமை. இவர் பழம்பதிநாதர் என்றும் அழைக்கப்படுகிறார். பிரம்மாவே வணங்கிய தலம் என்பதால், இது மிக பழமையான ஊராக கருதப்படுகிறது.

**தல பெருமை :**

வைகாசி விசாகத்தன்று மூலவரின் மீது சூரிய ஒளிக்கதிர்கள் பட்டு சூரியபூஜை நடக்கிறது. தஞ்சையை விட பெரிய ஆவுடை உள்ள கோவில் ஆகும். இவ்வளவு பெரிய ஆவுடையை வேறு எந்த கோவிலிலும் பார்க்க முடியாது. இதுவே இத்தலத்தில் மிகச்சிறந்த சிறப்பம்சமாகும்.

**பிரார்த்தனை மற்றும் நேர்த்திக்கடன் :**

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் தொட்டில் கட்டும் வழக்கமும், செவ்வாய்க்கே தோஷம் போக்கிய இத்தலத்தில் செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் வழிபட்டால் உடனடி பலன் கிடைக்கும். கேட்டதை கொடுக்கும் சிவபெருமானுக்கு வேஷ்டியும், துண்டும் சிவனுக்கென தனியாக நெய்து காணிக்கையாக செலுத்துகிறார்கள்.

**திருவிழா :**

இத்தலத்தில் வைகாசி விசாகம் 11 நாள் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

## அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோவில்

மூலவர் : ஆதிகேசவப்பெருமாள்

தல விருட்சம் : இலந்தை மரம்

பழமை : 500-1000 வருடங்களுக்கு முன்பு

ஊர் : பவானி

மாவட்டம் : ஈரோடு

**தல வரலாறு :**

ஒரு சமயத்தில், அசுரகுருவான சுக்கிரனின் பொறாமைக்கு ஆளான குபேரன், அவனிடமிருந்து தன்னை காத்து கொள்ள வேண்டி பூலோகத்தில் தல யாத்திரை சென்றான்.

அவன் இவ்வழியாக சென்றபோது புலி, மான், யானை, சிங்கம், பசு, நாகம், எலி என ஒன்றுக்கொன்று எதிரான குணங்களை உடைய விலங்கினங்கள் ஒரே இடத்தில் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அதைக்கண்ட குபேரன் அருகில் வந்தபோது தேவர்கள், மகரிஷிகள், கந்தர்வர்கள் என பலர் தவம் செய்து கொண்டிருந்தனர். மிருகங்களும் அவர்களுக்கு தொந்தரவு தராமல் அமைதியாக இருந்தன.

ஆச்சர்யமடைந்த குபேரன், கொடிய மிருகங்கள் அமைதியாக இருக்கும் இத்தலம் புனிதம் வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டுமென எண்ணினான். இவ்விடத்தில் திருமால், சிவனை தரிசிக்க விரும்பி தவம் செய்தார். இருவரும் குபேரனுக்கு காட்சி தந்தனர்.

குபேரன் அவர்களிடம், புனிதமான இந்த இடத்தில் தனக்கு அருளியது போலவே எப்பொழுதும் அருள வேண்டும் என வேண்டினான். குபேரனுக்காக சிவன் சுயம்புவாக எழுந்தருளினார். திருமாலும் அருகிலேயே தங்கினார். ஆகையால் இத்தலத்திற்கு அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோவில் எனப் பெயர் ஏற்பட்டது.

**தல பெருமை :**

ஆதிகேசவர் சன்னதிக்கு முன்புறம் வேணுகோபாலர் ராதா, ருக்மணியுடன் தனிச்சன்னதியில் தெற்கு பார்த்தபடி இருக்கிறார். இவருக்கு பின்புறத்தில் பசு ஒன்று உள்ளது. இந்த பசுவின் முன்பகுதியில் தலை இருப்பதோடு, பின் உடல் பகுதியில் மற்றொரு தலையும் இருக்கிறது. இவ்வாறு இரண்டு தலைகளுடன் பசு காட்சியளிப்பது சிறப்பம்சமாகும்.

**பிரார்த்தனை மற்றும் நேர்த்திக்கடன் :**

திருமணத்தடை, புத்திர தோஷம் இருப்பவர்கள் இத்தல இறைவனுக்கு நைவேத்தியம் படைத்து, திருமஞ்சனங்கள் செய்து வழிபடுகின்றனர். புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் பெருமாளுக்கு பாசிப்பருப்பு நைவேத்யம் படைத்து வழிபடுகிறார்கள். இவ்வாறு செய்வதால் புத்திர பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. வேண்டுதல்கள் நிறைவேறியவர்கள் துலாபாரம் செலுத்தி நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றனர்.

**திருவிழா :**

இத்தலத்தில் சித்திரையில் பிரம்மோற்ஸவம், ஆடிப்பெருக்கு மற்றும் வைகுண்ட ஏகாதசி ஆகியவை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

*****************